Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily

மலர் 8 (21-6-66) இதழ் 134

ராபவ ஆனி 7 ரபி அவ் 1 செவ்வாய்க்கிழமை

## ஆறுமாத ‘லீவு’ தாருங்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறுகிறோம்

### தமிழ் அரசாங்க ஊழியர்கள் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறுவதற்காக இப்பொழுது சிங்களம் படிக்கும் தமிழ்அரசாங்க ஊழியர்கள், இம்மொழியில் போதிய தேர்ச்சி அடைவதற்காக அரசாங்கத்திடம் ‘லீவு’ கேட்டுள்ளனர்.

‘‘ஆறு மாத லீவு தாருங்கள் நாங்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெறுகின்றோம்’’ என்று இவர்கள் கோரியுள்ளனர்.

இயசபந்தமான கோரிக்கையை ஏராளமான தமிழ் அரசாங்க ஊழியர்கள் தங்களது இலாகா தலைவர்கள்மூலமாக அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளனர்-

‘‘குறைந்தது ஆறு மாத காலத்துக்காவது ‘லீவு’ கொடுத்தால்தான் நாங்கள் சிங்களத்தில் ஓரளவு தேர்ச்சிபெற்று கஷ்டமெதுவுமின்றி கடிதத் தொடர்புகளையும்

(5-ம் பக்கம் பார்க்க)

# வேலை நிறுத்தங்களில் புதிய திருப்பங்கள்

## ரூ.30லட்சம்பெறுமான கடத்தல் பொருள்

### கம்பர் மலையில் பிடிபட்டது

-- நமது நிருபர் அரசரத்தினம் --

யாழ்ப்பாணம், செவ்.

30 லட்சம் ரூபாய் பெறுமதியானவை என மதிப்பிடப்படும் பொருள்கள் சில நேற்று கம்பர்மலைக்கு சமீபத்தில் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

பெறுமதிவாய்ந்தபொருள்கள் சில கடத்தப்படுவதாக பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து கம்பர்மலைக்குச் சமீபத்திலுள்ள மதகு ஒன்றில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதிராஜு தலைமையில் பொலிஸ் கோஷடி ஒன்று மறைந்திருந்தது. அச்சமயத்தில் அப்பாதையால் வந்த மோட்டார் வான் ஒன்றைப் பொலிசார் நிறுத்தும்படி சமிக்ஞை செய்தனர். மோட்டார் வானை நிறுத்துவதற்குப்பதிலாக சாரதி, அதன் வேகத்தை அதிகரித்தார்.

#### நான்குதடவை சுட்டனர்

பொலிசார்நான்குதடவை சுட்டனர். வான் சிறிது தூரம் சென்று நிறுத்தப்பட்டது. சாரதி வெளியே குதித்துத் தப்பி ஓடிவிட்டாராம்.

இதன்பின் அந்த வானைப் பொலிசார் பரிசோதனை செய்து அதில் பதினெட்டுப் பெட்டிகள்இருக்கக் கண்டனர். இப்பொருள்கள் கள்ளக் கடத்தல் பொருள்கள் எனப் பொலிசார் கருதி அவற்றை யாழ்ப்பாண சுங்க அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

அந்தப்பெட்டிகளுள் தங்க வளையல்கள், ஜவுளிகள், பொட்டுப் போத்தல்கள் மற்றும் பல பொருட்களும் இருக்கக்காணப்பட்டனவாம். நீண்டநேரமாக இப்பெட்டிகள் பரிசீலனை செய்யப்பட்டன. இச்சோதனை பொலிஸ் பாதுகாப்புடன் நடைபெற்றது. (நநி)

## இன்று 75,000 ஊழியர் அடையாளவேலைநிறுத்தம்

### தொழிலாளர் கழகம் இன்று வேலைநிறுத்தம் ஆரம்பிக்காது

கொழும்பு, செவ்வாய்

கொழும்பிலும் தோட்டப் பகுதிகளிலும் இன்று செவ்வாய்க்கிழமை எழுபத்தையாயிரம் ஊழியர் வேலைநிறுத்தம் செய்வார்களென்றும் கொழும்பில் அரைநேரமும் தோட்டப் பகுதிகளில் முழுநாளும் இவர்கள் அடையாள வேலைநிறுத்தம் செய்வார்களென்றும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் (பீகிங் கம்யூனிஸ்ட் கட்சி சார்பு) திரு. என். சண்முகதாசன் தெரிவித்துள்ளார்.

ஒரு ரூபாய் சம்பள உயர்வு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மற்றும் பன்னிரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து நடத்தவிருக்கும் ‘போராட்டத்துக்கு’ ஆதரவாக இந்த அடையாள வேலைநிறுத்தம் நடைபெறவிருக்கிறது என்று திரு. சண்முகதாசன் தெரிவித்தார். கொழும்பில் நாளைமாலை பொதுக்கூட்டமொன்றையும் இந்த யூனியன் நடத்துகிறது.

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம், செவ்.

மோட்டார் சாரதி லைசென்ஸ் பெறுவதற்கு பல பரீட்சைகளிலும் சித்திபெற்ற உரும்பராயைச் சேர்ந்த ஒருவருக்கு, கடைசியாக மோட்டார்சாரதி லைசென்ஸ் புத்தகம் கிடைத்தது. ஆனால் ஆவல் மிகுதியுடன் அதனை அவர் பிரித்துப் பார்த்தபொழுது ...... அவருக்கே தூக்கிவாரிப் போட்டது!

அந்த லைசென்ஸ் புத்தகத்தில் வேறு ஒரு நபரின் புகைப்படம் ஒட்டப்பட்டிருந்தது. அதனுடன் அப்புத்தகத்திலிருந்த பெயரும் வித்தியாசமாக இருந்தது! ஆனால் அந்த லைசென்ஸ் புத்தகம் அனுப்பப்பட்டதோ இவருக்குத்தான்.

இதுபற்றி தபாற்கந்தோரில் அவர் விசாரித்தபொழுது...... ‘‘போம்... போம்...... இது உமது படம்தான். இது உமக்குத்தான் வந்திருக்கிறது...’’ என்று கூறி அனுப்பிவிட்டார்களாம். இதில் என்ன ஆச்சரியமென்றால் குறிப்பிட்ட நபருக்கு வந்திருந்த தபாலுறையில் எழுதப்பட்டிருந்த விலாசமும், லைசென்ஸ்புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த பெயரும் தனிச்சிங்களத்தில்தான்!

## நான்குலட்சம்பேர்வேலைநிறுத்தம்

தோட்டத் தொழிலாளருக்கு விசேஷ பஞ்சப்படி கோரி வேலைநிறுத்தம் செய்து வரும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர் தொகை 2 லட்சத்து 57 ஆயிரத்து 544 தான். ஆனால் நான்கு லட்சம் தோட்டத் தொழிலாளர் இப்பொழுது வேலைநிறுத்தம் செய்து வருவதாக ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழரசுக் கட்சியின் தொழிலாளர் கழகம் ஆகியவைகளின் அங்கத்தவர்களும் வேலைநிறுத்தம் செய்வதாக அவர் கூறுகிறார்.

## இ. தொ. கா. சேரவில்லை

வேலை நிறுத்தத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லையென்றும் இ. தொ. கா. அங்கத்தவர் ஒருவராவது வேலைக்குச் செல்லாது நிற்காது கவனித்துக் கொள்ள வேண்டுமென கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இ. தொ. கா. பொதுக் காரியதரிசி, திரு. எம். எஸ். செல்லசாமி தெரிவித்துள்ளார்.

இதேசமயம் வேலைநிறுத்த நடவடிக்கைக்குத் தயாராக இருக்குமாறு ஐக்கிய தோட்டத்தொழிலாளர் யூனியன் தனது அங்கத்தவர்களை உஷார்படுத்தியுள்ளார்.

## தொழிலாளர்கழகம் சேராது

தோட்டத் தொழிலாளருக்கு விசேஷ பஞ்சப்படி வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அது இப்பொழுது அரசியல் போராட்டமாக மோசமான நிலையில் உருவெடுத்துள்ளதால், முன்னர் திட்டமிட்டபடி தமிழரசுக்கட்சியின் தொழிலாளர் கழகம் வேலைநிறுத்தம் செய்யமாட்டாதுஎன்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

## ஆகஸ்டில்

## ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சை

கொழும்பு, திங்கள்

அடுத்த ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சை ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி ஆரம்பமாகி 28-ம் தேதி முடிவடையும் இத்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் தினம் நேற்றைய தினமாகும்!

ஆகஸ்ட்டில் நடைபெறும் ஜி. சி. ஈ சாதாரண பரீட்சையில் ஒரு குறிக்கப்பட்ட அளவு பரீட்சார்த்திகளே பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் நான்கு பாடங்களுக்குக் குறைய சித்திபெற்ற எவருமே இந்தப்பரீட்சைக்கு அமரவதற்கு அனுமதிக்கப்படவில்லை!

கூடியளவு தொகையினர் தகுதியின்றி பரீட்சையெடுப்பதால் அர்த்தமில்லையென்று கல்வி இலாகா செய்துகொண்ட முடிவைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வரும்டிசம்பரில் நடைபெறும் ஜி. சி. ஈ (சாதாரண) பரீட்சைக்கு இந்த விதமான கட்டுப்பாடு இருக்கமாட்டாது.

## எதிரி பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், செவ்

ஆனைக் கோட்டையைச் சேர்ந்த செல்லையா சோமசுந்தரம் என்பவர் ஒரு பெண்மீது பலாத்காரம் பிரயோகித்ததாக ஆனைக்கோட்டைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சார்பில் புரக்டர் தளையசிங்கம் யோகநாதன் ஆஜரானார். எதிரியை 250 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு விசாரணையை இம்மாதம் 21ந் தேதிவரை நீதிபதி ஒத்திவைத்தார்.

## பௌத்த பிக்குக்கு வீடடுக் காவல்

சைகோன், ஜூன் 20

தென்வியட்னாமின் [illegible] நகரமான ஹூவேயில் [illegible] ந்துசிலதினங்களாக உண்ணாவிரதமிருந்துவரும் பிரபல பௌத்த பிக்கு வ தென்வியட்னாம் அரசாங்கம் வீட் [illegible] நிலை ப்பொழுது மோசமடைந்துள்ளது.

## கைகலப்பை தொடர்ந்து அட்டனில் பொலிஸ்பாரா

அட்டனில்வேலைநிறுத்தம் செய்யும் தோட்டத்தொழிலாளருக்கும் வேலைநிறுத்தம் செய்யா தொழிலாளர்சிலருக்குமிடையில் நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற ஒரு கைகலப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து அட்டன்மாவட்டத்திலுள்ள தோட்டங்களில் பொலிஸ் ரோந்துக்காவல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மூன்று கைகலப்புச் சம்பவங்கள் பற்றிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுவரை நால்வர் பொலிசாரால் கைது

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

மைன்டேர்ஸ்

பிளேட்டின் மெஷினில் (Platin machine) வேலைசெய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். சேமலாபநிதி உண்டு. விண்ணப்பிக்கவும்: 30, பெரியதெரு, யாழ்ப்பாணம் 581

மனேச்சர்

நீர்வேலி தெற்கு ஐக்கிய பண்டகசாலைச் சங்கத்திற்கு மனேஜர் தேவை. தகுதி: எஸ். எஸ். சி. சித்தியெய்தியவரும், கூட்டுறவு கலாசாலை பயிற்சியுள்ளவரும், வயது: 25—40 க்கு இடைப்பட்டவர். இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-6-66 க்கு முன் பதிவுத்தபால் மூலம் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். பிணை: உரொக்கம் ரூபா 1000/-. ஆதனம் ரூபா 2000/- சம்பளம் ரூபா 80/. ஆரம்பம் (படிகளுட்பட) காரியதரிசி நீர்வேலி தெற்கு ஐக்கிய பண்டகசாலைச் சங்கம், நீர்வேலி. 579

## வாடகைக்கு

கடை

நல்லூர் மார்க்கெட்டுக்கு முன்னால் பலசரக்கு வியாபாரம் நடைபெறும் கடை ஆலை மார்க் சோடா சப் ஏஜென்சியுடன்வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு விஜயா ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை வீதி, நல்லூர். 578

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

செயின் புளக்

2 1/2 தொன்நிறையுள்ள செயின் புளக் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்கட்கு குமாரசாமி, 83, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 570

காணி

மூன்றரை பரப்புக் காணி நாவலர் வீதிக்கு அருகாமையில் புது அத்தியடி வீதியில் விற்பனைக்கு உள்ளது. இலக்கம் 272, நாவலர்வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 573

நெற்காணி

நெற்காணி 6 ஏக்கர் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து 3 மைல் தூரத்தில்உள்ளது கிளிநொச்சி 5 ம் வாய்க்கால் நீர்ப்பாய்ச்சல் உண்டு. மோட்டார் வாகனத்தில் செல்லலாம். மேலும் விலை விபரம் அறியவிரும்புவோர் பரந்தன் M. P. C. S., S. சுப்பிரமணியம் அவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம். 576

நாய்க்குட்டிகள்

7 வாரம் பூர்த்தியாகிய P. B. ஆண் பெண் அல்சேஷன் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தியாகராஜா தேவராசா மானிப்பாய் வடக்கு என்ற விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 577

## சீனப்பத்திரிகை . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரியின் கட்டுரை ஒன்று நேற்றுத்தான் சீனப்பத்திரிகைகளில் இடம்பெற்றிருந்தது.

"ஒருமுகமான, புரட்சிகரமான, சரியான சிந்தனைதான் இன்று சீனவுக்குத் தேவையானது. இதுதான் மா-ஸே-துங்கின் சிந்தனையாகும்" என்று தமது கட்டுரையில் சீனப்பாதுகாப்பு மந்திரி கருத்து தெரிவித்துள்ளார்.

## கல்வி

வகுப்புகள்

ஜீ சி ஈ. சாதாரணம், கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் ஆகியவற்றில் ஆகஸ்ட், டிசம்பர் பரீட்சைகளுக்கான வகுப்புகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. தாமதமின்றி சேர்ந்துகொள்ளுங்கள். ஐக்கியகலாசாலை, 107, பருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 562

வகுப்புகள்:

எதிரே வரும் க. பொ. த. (சாதாரணம்) ஆவணி, மார்கழிப் பரீட்சைக்குத் தோன்றுபவர்களுக்கு கலை, விஞ்ஞானம் (லண்டன், இலங்கை, இந்தியப் பட்டதாரிகளாலும்) கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், பி. கொம் பட்டதாரிகளாலும், சுருக்கெழுத்து, தட்டச்சு 44 வருட அனுபவமுள்ளவராலும் விசேஷ வகுப்புகள் தமிழ்/ஆங்கிலம் இரு பாஷைகளிலும் நடைபெறுகின்றன. நேரில் பார்வையிட்டுச் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி ஸ்தாபிதம்: 1924 பருத்தித்துறை/வர்த்தகக்கல்லூரி ஸ்தாபிதம்: 1966 வதிரி/கரவெட்டி. 580

## பனைமரம் விழுந்து இருவர் மரணம்

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு பத்தாவது வட்டாரத்தைச் சேர்ந்த இருவர் பனைமரம் முறிந்து விழுந்ததினால் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். ஒருவர் உயிர் தப்பினார். இச்சம்பவம் சடந்த வெள்ளிக்கிழமை மாலை நிகழ்ந்தது.

புங்குடுதீவு ஆலடிச் சந்திக்கு அருகாமையில் நடைபெற்ற இந்த விபத்தினால் புங்குடுதீவு வாசிகளான ஏ. கந்தையா (வயது40) சிவசம்பு (வயது 70) ஆகிய இருவரும் உயிரிழந்தனர்.

கிணறு ஒன்றைத் தோண்டிக்கொண்டிருந்த பொழுது அருகிலிருந்த பனைமரமொன்று சோழகக்காற்றின் வேகத்தால் முறிந்து இவர்கள்மீது விழுந்ததெனத் தெரிவிக்கப்படுகிறது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று மரணவிசாரணை நடத்தினர். புங்குடுதீவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மா. முருகேசு விசாரணையின்பின் பனைமரம் முறிந்ததால் விபத்திற்குள்ளாகி மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்புக்கூறப்பட்டது.

## சமயச்சூழலிலான கல்வி அவசியம்

உடும்பராய் திங்கள்

சமூகம் வளர்ச்சியடையச் சமயக்கல்வி மிகவும் அத்தியாவசியம். சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் சைவாசிரியர்களின் கீழ் பயிற்சி பெறவேண்டும். எனவே சைவப்பிள்ளைகள் கற்கும் பாடசாலைத் தலைவர்களும் சைவர்களாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர் கல்வி வளம் பெறும். திரு. சி. பொன்னுத்துரை சென்ற 38 வருடகாலம் நமது தமிழ் மொழிக்கும் சைவநற்சமயத்திலும் செய்த சேவையை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்று அண்மையில் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நீண்டகாலம் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்து ஒய்வு பெறும் திரு சி. பொன்னுத்துரைக்கு பெற்றார்—ஆசிரியர்சங்க சார்பில் நடைபெற்ற சேவைநலம் பாராட்டுபசாரவிழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த, சைவாசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு. சி. சுவாமிநாதன் கூறினார்.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலைத் திறந்த வெளிஅரங்கில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. வ. நடேசலிங்கம் தலைமை தாங்கினார். வழக்கறிஞர் திரு. ஆ. தனபாலசிங்கம் சேவைநலம்பாராட்டுபசார விழாவினை ஆரம்பித்துவைத்தார்.

தலைமையாசிரியர் திரு. சி. பொன்னுத்துரையின் நிழற்படத்தை கோப்பாய் எம். பி. திரு சி கதிரவேலுப்பிள்ளை திறந்துவைத்துப்பேசினார்.

கல்லூரி அதிபர்கள் திருவாளர்கள் அ. வைத்திலிங்கம், இ. சபாலிங்கம், வலி. கிழக்கு தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. க. இ. குமாரசாமி, பண்டிதர் நீ. சி. முருகேசு, இளைப்பாறிய மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க. சிவஞானரத்தினம் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## விளம்பரம்

### அனலைதீவு மேற்குக் கடற்கரை றோட்டு வேலை

மேற்படி வேலைக்குரிய கேள்விப்பத்திரங்கள் 6-7-66-ம் திகதி மாலை 6 மணிவரையில் அனலைதீவுக் கிராமசபைத் தலைவரவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் ரூபா 50/- கட்டுப்பணம்கட்டிப் பெற்றுக்கொள்ளல்வேண்டும். மேலதிக விபரங்கள் அறிய விரும்புவோர் அனலைதீவு கிராமசபை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

திரு. சு. நாகலிங்கம்,
கிராமசபைத்தலைவர்
613 அனலைதீவு.


## நிக்ருமாவை கடத்த முயற்சி

அக்ரா, ஜூன், 20

தற்பொழுது கினியில் தஞ்சம் புகுந்திருக்கும் கானாவின் முன்னாள் அதிபர் டாக்டர் நிக்ருமா, கானாவில் விசாரணை செய்வதற்காக அங்கிருந்து கடத்தப்படலாமென்று இங்கிருந்து வெளியாகும் சில ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

டாக்டர் நிக்ருமாவை கைது செய்வதற்காக கானாமுன்னர் சர்வதேச வாரண்ட் பிறப்பித்திருந்தது.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவீஸ்
தெய்வத்தாய்



REGAL—JAFFNA
NOW SHOWING!
Sean Connery
in
THE HILL
(Thrilling army film)



நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
நவராத்திரி




ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெமினி - சாவித்திரி
நடித்த
மாதர்குல மாணிக்கம்



Lionite
லயனைட்டைப்
பார்வையிடும்வரை
அஸ்பெஸ்டோஸ்
பொருள்களை
வாங்காதீர்கள்.....

தங்கள் வேலையில் பெருமை கொள்வோரும், மிகச்சிறந்த பொருள்களையே நாடுவோரும், அதேசமயம் சரச விலையிற் கணணுயிருப்போருமாகிய கட்டிட வினைஞர்கள், குத்தகைக்காரர்கள், கட்டிட நுட்ப ஆசாரிகள் முதலியோர் தங்கள் தேவைகளைத் தெரிவு செய்ய முன்பு லயனைட்டைப் பார்வையிடாமல் விட்டால், தங்களுக்கும் தங்கள் வாடிக்கையாளருக்கும் நியாயம் இழைத்தவர்களாகமாட்டார்கள்.

இலங்கையில் எங்கும் கிடைக்கும். "பொப்பியூலர் சிக்ஸ்" என்னும் மழை நீர் போக்கிக்கான கருவிப் பொருள்களும் 4' × 4' அளவும் 6' × 4 அளவுமான தட்டையான அஸ்பெஸ்டோஸ்ஷீட்டுகளும் எம்மால் தயாரிக்கப்படுகின்றன



லயனைட்டை உங்கள் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையோடு சிபார்சு செய்யுங்கள்
ஸ்ரீ லங்கா அஸ்பெஸ்டோஸ்,
ப்றெடக்ஸ் லிமிட்டெட்,
61, ஜெட்டவன வீதி, கொழும்பு-14.
தொலை பேசி: 7712


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருடத்துக்குள் வியட்காங்கியர் விரட்டப்படுவர்

## தென் வியட்னும் பிரதமர் கீ அறிவிப்பு

சைகோன், ஜூன் 20

அடுத்த வருடத்துக்குள் வியட்காங்கியரை எமது (தென்வியட்னும்) துருப்புகள் தோற்கடித்துவிடும் என்று தென்வியட்னும் பிரதமர் ஏர் வைஸ்மார்ஷல் காவோ கீ நேற்று இங்கு தெரிவித்தார்.

தென்வியட்னுமில் கீ இராணுவ அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு வருட காலத்தை குறிக்கும் முகமாக நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில்தான் பிரதமர் கீ மேற்கண்ட நம்பிக்கையை வெளியிட்டார்.

தென் வியட்னுமிலிருந்து சகல எதிர்ப்பு சக்திகளும் அடுத்த வருடத்துக்குள் ஒழிக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்த அவர் அடுத்த வருடம் ஜனநாயகத்துக்குப் பெரும் வெற்றிகிடைக்கும் என்றும் கூறினர்.

### குண்டு வீச்சு நீடிக்கிறது

இதற்கிடையே வடக்கு வியட்னுமிலும் தென்வியட்னும் கரையோரப் பகுதிகளிலும் அமெரிக்கத் தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. அமெரிக்க மாலுமிப்படைகள் நேற்று அதிக நேரம்வரை தென்வியட்னும் கரையோரப் பாதைகளில் வியட்காங்கியர் மீது கடுமையான தாக்குதல்கள் நடத்தின.

# இந்தோனேஷிய - மலேசிய உறவு: பிரச்னைகள் எதுவும் எழவில்லை

## தூதுகோஷ்டித் தலைவர் கருத்து

கோலாலம்பூர் ஜூன், 20

மலேஷியாவுடன் இந்தோனேஷியா மீண்டும் உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதில் பிரச்னைகளோ அல்லது கஷ்டங்களோ தலைதூக்கவில்லை என்று இங்கு வந்திருக்கும் இந்தோனேஷிய தூதுகோஷ்டியின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நால்வர் கொண்ட இத்தூதுகோஷ்டி நேற்றுமுன்தினம் இங்கு வந்துசேர்ந்தது. இந்தோனேஷிய— மலேசிய உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதற்கு உதவக்கூடிய சமாதானப் பேச்சுவார்த்தைகளை இக்கோஷ்டி இங்கு நடத்திவருகிறது.

மலேசிய உதவிப் பிரதமர் துன் ரஸாக்குடன் இத்தூதுகோஷ்டியினர் நேற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இதன் பின்னர் இக்கோஷ்டித்தலைவர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், இரு நாடுகளும் மீண்டும் உறவுகளைஏற்படுத்திக்கொள்வதில் முட்டுக்கட்டைகள் எதுவுமே தோன்றவில்லை என்று கூறினர்.

# நாஸர் - டிட்டோ - இந்திரா உயர் மகாநாடு

## ஆசிய - ஆபிரிக்க உறவு மோசமடைவதே காரணம்?

கெய்ரோ ஜூன் 20

சில ஆபிரிக்க நாடுகளுக்கும் ஆசிய நாடுகளுக்குமிடையேயான உறவு மோசமடைந்து வருவதே, நாஸர் — டிட்டோ —இந்திரா உயர் மகாநாட்டின் பிரதான காரணம் என்றும், ஜனதிபதி நாஸர் இதன்காரணமாகவே இவ்விதமகாநாட்டை வற்புறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்த மகாநாடு வருகிற அக்டோபர் மாதம் புதுடில்லியில் நடைபெறவிருக்கிறது.

அபிவிருத்தியடைந்துவரும் பலநாடுகள் மண்டலசார்பற்ற கொள்கையிலிருந்து விலகிச்செல்வது குறித்து ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவர்கள் கவலையடைந்திருப்பதாய்க் கூறப்படுகிறது.

இவ்விதப் போக்குக்குவழி வகுக்குமுகமாகவே நாஸர்-டிட்டோ - இந்திரா சந்திப்பு ஒரு பூர்வாங்கமாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சென்னையில்

# பக்தவத்சலம் தலைமையில் கி. வா. ஜ. மணிவிழா

## ஜூலை 12-ல் இலங்கை வருவார்

சென்னை, ஜூன் 20

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் மணிவிழாவைச் சென்னையில் அடுத்த மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விழாவுக்கு தமிழ் நாட்டு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் தலைமை வகிப்பார்.

திரு. கி. வா. ஜ. தமது இலங்கை விஜயத்தை ஒத்திவைத்திருந்ததாக முன்னர் கூறப்பட்ட பொழுதிலும், அநேகமாக அவர் ஜூலை மாதம் 12-ம் திகதி கொழும்பு வந்து சேருவார் என்று இப்பொழுது தெரியவருகிறது. 13-ம் திகதியிலிருந்து அவர் இலங்கையின் பல பகுதிகளிலும் நடைபெறும். தொடர்ச்சியான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இறுதி நான்கு தினங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நிகழ்சிகளில் கலந்து கொள்வார் என்றும் யாழ்ப்பாணத்திலிருந்தே அவர் தாயகம் திரும்புவார் என்றும் தெரியவருகிறது.

# சுதந்திரம் பெறும் லெசோதோ

லண்டன், ஜூன் 20

தென் ஆபிரிக்க பிராந்தியத்தில் பிரிட்டனில் காலனி நாடாக இருந்துவந்த பசூட்டோலாந்து இவ்வருடம் அக்டோபர் மாதம் 4-ந் திகதி சுதந்திரம் பெறுகிறது.

லெசோதோ என்னும் புதிய பெயருடன் இந்நாடு சுதந்திரம் அடையும் லண்டனில் நடைபெற்றுமுடிந்த அரசியலமைப்பு சட்ட மாநாட்டின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சுதந்திரம் கோரி பசூட்டோலாந்து பாராளுமன்றம் நிறைவேற்றியது தீர்மானங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரித்திருப்பதுடன் இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவிருக்கிறது.

புதிய அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் லெசோதோ எனப்படும் இந்தப்புதிய நாடு அதிபத்திய உரிமை கொண்ட ஜனநாயக நாடாக திகழும்

# ஸாம்பியா செல்லும் பிரி. தூதுகோஷ்டி

லண்டன், ஜூன் 20

காமன்வெல்த் விவகார ராஜாங்க அமைச்சர் திருமதி ஜூடித்ஹாட்டின் தலைமையில் இவ்வார இறுதியில் பிரிட்டிஷ் தூதுகோஷ்டி ஒன்று ஸாம்பியா செல்ல இருக்கிறது. ரொடீஷியப் புரட்சி அரசாங்கத்திற்கு எதிராக வர்த்தகத் தடைகளைத் தீவிரமாக்குவது பற்றியும், ரொடீஷியப் புரட்சியை அடுத்து எழுந்துள்ள சூழ்நிலையில் ஸாம்பியாப் பொருளாதாரத்தைச் சமாளிப்பது சம்பந்தமாகவும் இத்தூதுகோஷ்டி ஸாம்பிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும்.

# சூ

புச்சாரெஸ்ட், ஜூன் 20

இங்கு விஜயம்செய்துள்ள சீனப் பிரதமர் திரு. சூ—என்—லாய் நேற்று ருமேனிய அதிபருடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தினர்.

இருநாட்டு உறவுகள் பற்றி நேற்றைய பேச்சுக்கள் அமைந்திருந்ததாகக் கூறப்பட்டது.

# "குண்டு வீச்சை நிறுத்துக"

## திருச்சபைகள் கோரிக்கை

லண்டன், ஜூன் 20

பிரிட்டனிலுள்ள கிறீஸ்தவ திருச்சபை பிரதிநிதிகள் தூதுகோஷ்டி ஒன்று பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. மைக்கல் ஸ்டீவார்ட்டை இவ்வாரம் சந்தித்து வியட்னும் பிரச்னை சம்பந்தமாக மகஜர்ஒன்றை கையளித்தது.

தென்வியட்னுமும், அமெரிக்காவும் வடவியட்னும் மீதான குண்டுத் தாக்குதல்களை நிறுத்தவேண்டுமென்றும், வடவியட்னும் தென் வியட்னுமிற்குள் ராணுவ ஊடுருவல்களை மேற்கொள்ளாதிருக்கவேண்டுமென்றும் இந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

புதிதாக யுத்த நிறுத்தம் ஒன்று அனுஷ்டிக்கப்பட்டு அக்கால கட்டத்திற்குள் சமாதானப் பேச்சுகளுக்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட வேண்டுமெனவும் இந்த மகஜரில் யோசனை தெரிவிக்கப் பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட நாடுகள் பேச்சுவார்த்தைகளின் போது தென் வியட்னும் அரசாங்கத்தையும், தேசிய விடுதலை முன்னணியான வியட்கொங்கையும் அங்கீகரிக்க வேண்டுமெனவும் இதில்கோரப்பட்டிருக்கிறது

# இந்தியாவில் மேலும் ஒரு ரயில் விபத்து

## 15 பேர் பலி 50 பேர் காயம்

புதுடில்லி, ஜூன் 20

இந்திய மேற்கு ரயில்வேயில் ஆஜ்மீருக்கருகே நேற்று காலை ஏற்பட்ட ரயில் விபத்து ஒன்றில் 15 பேர் மாண்டனர். 50 பேர் காயமடைந்தனர்.

அஹமதாபாத் - டில்லி எக்ஸ்பிரஸ் ரயில்வண்டி, சாமான் ரயில்வண்டி ஒன்றுடன் மோதியதனல் இவ்விபத்து ஏற்பட்டது.

என்ஜினும், ஒரு சாமான் பெட்டியும், 7 சாமான்வண்டிகளும் தடம்புரண்டன,

காயமடைந்த அனைவரும் ஆஜ்மீர் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டனர்.

சிதைவுக்கருகில் மேலும் பல சடலங்கள் இன்னும் இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

# ரயில் விபத்துகள் குறித்து உயர் கட்டத்தில் விசாரணை

புதுடில்லி, ஜூன் 20

இந்தியாவில் அடிக்கடி நிகழும் ரயில் விபத்துக்கள் குறித்து இன்றுஉயர்கட்டத்தில் விசாரணைகள் ஆரம்பித்தன.

ரயில்வே மந்திரி திரு பட்டீலின் உத்தரவைத் தொடர்ந்து இவ் விசாரணைகள் தொடங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்ட ரயில் விபத்துககளில் சுமார் 300பேர்பலியானதாகமதிப்பிடப்பட்டது. இந்த விபத்துக்களில் மூன்று, நாசவேலை காரணமாக நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

### மாண்டவர் 15-ஆக அதிகரிப்பு

இதற்கிடையே நேற்று அஜ்மீரில் ஏற்பட்ட ரயில் விபத்தில் மாண்டவர்கள் தொகை பதினைந்தாக அதிகரித்துள்ளது. 37 பேர் படுகாயமடைந்தனர் 22 பேருக்கு இலேசான காயம் ஏற்பட்டது.

# சீனப் பத்திரிகைகளில் மீண்டும் மாஸே-துங்

பீகிங், ஜூன் 20

நீண்டநாள் இடைவேளைக்குப் பின்னர் மா-ஸே-துங்கின் தத்துவம் பற்றிய செய்திகள் சீனப்பத்திரிகைகளில் முதற்பக்கங்களில் வெளியாகியுள்ளன.

சீனப்பாதுபாப்பு மந்திரி லின் பியோ மா-ஸே-துங் தத்துவம் பற்றி வெளியிட்ட செய்தியொன்று நேற்றுமுன்தினம் சீனப்பத்திரிகைகளில் கொட்டையெழுத்தில் வெளியிடப்பட்டிருந்தன.

கடந்த மார்ச் மாதம் பதினொராந்திகதி கைத்தொழில் மகாநாடொன்றுக்கு அனுப்பப்பட்ட சீன பாதுகாப்பு

(2-ம்பக்கம் பார்க்க)

## 75 பேர் கைது

புதுடில்லி, ஜூன் 20

மைசூர் — மகராஷ்டிர எல்லைத் "தகராறு" காரணமாக மைசூரில் நேற்று எழுபத்தைந்துபேர் கைது செய்யப்பட்டனர்

# 'உலக படைக்குறைப்பு மகாநாடு கூட்டப்படவேண்டும்'

மாஸ்கோ, ஜூன் 20

உலக படைக்குறைப்பு மகாநாடொன்று விரைவில் கூட்டப்படவேண்டுமென்று ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கோஸிஜின் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பின்லாந்தில் சுற்றுவிஜயம்செய்த பிரதமர் கோஸிஜின் தமது விஜயத்தின் முடிவில் வெளியிட்ட கூட்டறிக்கையொன்றில்தான் இக்கோரிக்கையை வெளியிட்டுள்ளார்.

பின்லாந்து பிரதமரும் ரஷ்யப்பிரதமரும் நேற்று வெளியிட்ட கூட்டறிக்கையில் உத்தேச படைக்குறைப்பு மகாநாட்டுக்கு சகல நாடுகளும் அழைக்கப்படவேண்டுமென்று தெரிவித்துள்ளனர்.

## நாஸர்

கெய்ரோ. ஜூன் 20

சுயேஸ் கால்வாயிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் கடைசியாக வெளியேறிய பத்தாவது ஆண்டைக் குறிக்கும் வைபவமொன்றில் ஐக்கிய அரபுகுடியரசு அதிபர் கமால் அப்துல் நாஸர் நேற்றுக் கலந்துகொண்டபோது சுமார் ஒரு லட்சம் மக்கள் அவரை வரவேற்றனர்.

(பி. டி. ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எந்த வழி சரி, எது தவறு என்பது பற்றிச் சந்தேகம் வரும்போது, உங்கள மனச்சாட்சியைக் கலந்து யோசிக்கவேண்டும். அதிகாலை 4 மணிக்கு, அமைதியான சூழ்நிலையில் சிந்தித்துப் பயிலுக. மனச்சாட்சி சரியான வழியைக் காட்டும். ஒரு காரியம் செய்வதில் பயமோ, வெட்கமோ, சந்தேகமோ ஏற்படும்போது தவறு செய்கிறேமென்று உணர்க.

—சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

பராபவ ஆனி 7 (21-6-66)

## சேதுசமுத்திரத் திட்டமும் காங்கேசன்துறையும்

இந்தியாவின் சேது சமுத்திரத்திட்டம் இலங்கைக்கு கவலையளித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்தியாவானுலும் சரி வேறு எந்த நாடானுலும் தனது நலனுக்காக ஒரு திட்டத்தை மேற்கொள்ளும் பொழுது அண்டை நாடுகளின் நலனையும் கவனிப்பது நல்லது. இந்தியாவின் சேது சமுத்திரத் திட்டம் இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்கக் கூடுமெனினும் இலங்கை விவேகத்துடன் நடந்து கொண்டால் இந்தியாவின் திட்டத்தினுல் அதிக நன்மை பெறுவதற்கும் வழி பிறக்கும்.

பாக்குநீரிணையை ஆழமாக்குவதுதான் சேது சமுத்திரத்திட்டம். இத்திட்டம் பூர்த்தியடைந்ததும் இந்தியாவின் மேற்குக் கரையோரப் பகுதியிலிருந்து கிழக்குக் கரையோரப் பகுதிகளிலுள்ள துறைமுகங்களுக்கும் கிழக்கிலிருந்து மேற்குப் பகுதித் துறைமுகங்களுக்கும்செல்லும் பெரிய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு வராமலே செல்லும். இப்பொழுது கொச்சித் துறைமுகத்துக்கும் பின்னர் அங்கிருந்து கிழக்குப்பகுதித் துறைமுகங்களுக்கும் செல்லும் சர்வதேச கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்தைத் தாண்டிச் சென்று விடும். சேதுசமுத்திரத் திட்டம் இந்திய கப்பல்களின் போக்குவரத்துத் தூரத்தை வெகுவாகக் குறைத்து விடும். இதன் விளைவாக இந்தியக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வரமாட்டா. இதனுல் இலங்கையின் வருமானம் பாதிக்கவே செய்யும். ஆபத்தான நிலையைத் தவிர்ப்பதற்கு வழி என்ன?

காங்கேசன்துறைத் துறைமுகத்தை பெரிய அளவில் அபிவிருத்தி செய்வதும், தேயிலை மற்றும் பொருள்களை இத்துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்வதும், இத்துறைமுகத்தை உபயோகிக்கும் கப்பல்களுக்கு செலவு குறைவாக இருப்பதற்கான வழிகளை வகுப்பதும்தான் சேது சமுத்திரத்திட்டத்தால் இலங்கைபாதிக்கப்படாமல் தடுப்பதற்குரிய வழிகள் என்று யோசனை கூறப்படுகிறது.

சேதுசமுத்திரத் திட்டம் பற்றி இந்திய அரசாங்கம் அறிவித்த சமயத்திலேயே, இலங்கை அரசாங்கம் அத்திட்டத்தினுல் இலங்கைக்கு ஏற்படக்கூடிய சாதகபாதகங்களைப் பற்றி ஆராய்ந்து அதற்கேற்ற முறையில் பதில் திட்டங்களை உருவாக்கவேண்டும். சேது சமுத்திரத்திட்டம் பற்றி இந்திய அரசாங்கம் தெரிவித்த சமயத்திலேயே நமது பொருளாதார நிபுணர்களும் பத்திரிகைகளும் இலங்கையின் சாதகபாதக நிலை பற்றி எடுத்துக்கூறின. காங்கேசன் துறை துறைமுகத்தை விருத்திசெய்ய வேண்டிய தன் அவசியத்தை நாமும் பல தடவைகளிலும் சுட்டிக்காட்டியிருந்தோம். ஆனுல் அச்சமயம் ஆட்சியிலிருந்த அரசாங்கமும் அதன் பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கமும் அரசியல் மற்றும் காரணங்களால் காங்கேசன் துறைத் துறைமுகம் விருத்தி பற்றிய யோசனையைப் புறக்கணித்தது.

காங்கேசன் துறைத் துறைமுகத்தை விருத்தி செய்வதற்கு தேசிய அரசாங்கம் ஒப்புக்கொண்டு விட்டது. இதற்கென 25 லட்சம் ரூபாய் செலவிடவும் அது தீர்மானித்திருக்கிறது. ஆனுல் சேதுசமுத்திரத்திட்டத்தை இலங்கையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புஇருக்கிறது. காங்கேசன்துறைத் துறைமுகத்தை பெரிய அளவில் நவீன துறைமுகமாக்க காலதாமதமின்றி நடவடிக்கைஎடுக்கவேண்டும். இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள் யாவும் இங்கிருந்தே ஏற்றுமதி செய்யவும் வழி வகுக்கவேண்டும். இந்தியத் துறைமுகங்களின் கட்டணச் செலவைவிட இங்கு செலவு குறைவாக இருக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்விதம் செய்தால் சேது சமுத்திரத்திட்டத்தால் கொழும்புத்துறைமுகம் இழந்துவிடக்கூடிய வருமானத்தைவிட பல மடங்கு அதிகவருமானத்தை காங்கேசன்துறைத் துறைமுகம் பெற்றுக்கொடுக்குமென்பது உறுதி. சேது சமுத்திரத் திட்டத்தைக் கண்டு கவலைப்படுவதோ, இந்தியாவின் இத்திட்டத்துக்கு ஆதரவும் ஒத்துழைப்புமளிக்காமல் விடுவதால் நமக்குப்பயன் கிடைத்துவிடாது.

## கிராமசபைத் தேர்தல் முடிவுகள்

களுவாஞ்சிக்குடி, திங்கள் பளுகாமம் கிராமசபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட நபர்கள் வருமாறு. வட்டாரங்களின் இலக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன.

1 கே. பொன்னம்பலம், 2 க.இராசரத்தினம்,3 சி. இரத்தினம், 4 க. சாமித்தம்பி, 5 கே. மார்க்கண்டு, 6 த. தச்சுப்பன் போட்டியில்லை, 7 சி. பொன்னம்பலம், 8. சி. மூத்ததம்பி, 9 மு. கணபதிப்பிள்ளை.

துறைநீலாவணை பெரிய கல்லாற்று கிராமசபைக்கு நடைபெற்ற தேர்தலில் பின் வருவோர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். வட்டாரங்களின் இலக்கமும் சேர்க்கப் பட்டுள்ளது.

1 எஸ். பொன்னுத்துரை 2 பி. செல்லத்துரை,3 எஸ். சேனுபதி, 4 பி. தருமநாயகம், 5 பி. அப்பாக்குட்டி, 6 [illegible]ரி கிருஷ்ணபிள்ளை, 7 எஸ். பிள்ளையார்தம்பி, 8 [illegible] தம்பியப்பா.

சங்கத்தை

# கரந்தைக் குளவத்தை முருகமூர்த்தி கோயில்

பல நூற்றுண்டுகளுக்கு முன் சங்கரத்தையில் இருந்த சங்கரர்என்னும் சைவப் பெரியார் சிறந்த அறிவாளியாகவும் சமய அறிவுடையவராகவும் விளங்கினுர். ஒரு நாள்கதிர்காமத்துக்குப் போகும் யாத்திரிகர் என்று ஒரு முருகபக்தர், சங்கர சாத்திரியாரின் வீட்டுக்கு வந்தார். சாத்திரியார் அவ்வடியாரைப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்று அன்புடன் உபசரித்தார். இப்போது கோயில் மூலஸ்தானம்இருக்கும் இடத்துக்கு அருகில் வடக்கே இருந்த ஒருகிணற்றில் ஸ்நானம் செய்து சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு அடியார் சென்றுவிட்டார்.

அதன் பின்னர் அங்கிருந்த காவோலையின் கீழ் ஒரு வேலாயுதம் இருப்பதைச் சாத்திரியார் கண்டு மெய்தானரும்பி விதிர்விதித்துக் கைதனைத் தலையில் வைத் கண்ணீர் ததும்பி உள்ளம் வெதும்பிப் பரவசத்துடன் அவ்வேலாயுதத்தைக் எடுத்தார். அங்கோர் மடாலயத்தைக் கட்டி அவ்வேலாயுதத்தை அங்கு ஸ்தாபித்து வழிபட்டு வந்தார். இது கர்ணபாரம்பரியமான கதை.

இக்கோயிலில் ஒவ்வொரு வருடமும் கோடை காலத்தில் மூன்று மாதத்துக்குக் கந்த புராணம் படித்தலும் கந்தஷஷ்டி விரதகாலத்தில் சூரபன்மன் வதைப்படலமும் தெய்வயானையம்மை திருமணப்படலமும் படித்தலும் வழக்கமாகவிருந்தது. இதனுல் இவ்வூரவர்களின் பக்தியும் அறிவும் வளர்ச்சியடைவதற்கு இவ்வாலயம் பேருதவியாகவிருந்தது. பல ஆண்டுகளாக வேலாயுதத்துக்குப் பூசைசெய்த புராணம் படித்தலுமே பிரதானமாக நடைபெற்றன. நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள ஆறுமுகவேலவர் பேரில் திருவூஞ்சல் பாடப்பெற்றது.

நிகழும் ஆனி மாதம் 7-ம் திகதி (21-6-66) தொடக்கம் பத்துநாட்களுக்கு இவ்வாலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெறுகிறது. தினந்தோறும் பகல் பத்துமணி தொடக்கம் அபிஷேகமும், பூசையும் நடைபெறும் இரவு 6-30 மணியளவில் பூசை ஆரம்பமாகி 7 மணி தொடக்கம் சொற்பொழிவும் அதன் பின்னர் முருகப்பெருமான் வீதிவலம் வந்து காட்சியளித்தலும் நடைபெறும்.

—க. வயிரவநாதர்.

## உபதபால் அதிபர்களுக்கு பென்ஷன்!

### வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மந்திரி தகவல்

கொழும்பு, திங்கள் உபதபால் அதிபர்களின் பதவியை நிரந்தரமாக்குவதற்கும், பென்ஷன் வழங்குவதற்கும் தேசியஅரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக உதவி தபால் மந்திரி திரு. விஜயபால மெண்டிஸ் தெரிவித்தார்.

இலங்கை ஐக்கிய உபதபால் அதிபர்கள் தொழிற்சங்க வருடாந்தபொதுக் கூட்டம் கொழும்பு ஸ்ரீகோதா மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது உதவிமந்திரி பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னுர்.

உதவிமந்திரி மெண்டிஸ் மேலும் பேசுகையில், முன்னைய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து ஏராளமான உதவி பெற்றிருந்தும் வீணுன முறைகளில் திட்டமற்றமுறையில் செலவு செய்ததால், தற்போது வெளிநாட்டு உதவிகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதென்றும், ஆனுலும் உபதபால் அதிபர்களின் பிரச்னைகள் தீர்வதற்கு தேசியஅரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் கூறினுர்,

பதில் வர்த்தகமந்திரி திரு. எஸ். ஏ. பீரிஸ் பேசுகையில் உபதபால் அதிபர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பல பிரச்னைகள் தீர்க்கப்படவில்லையென்றும், தேசிய அரசாங்கம் விரைவில் படிப்படியாக பிரச்னைகத் தீர்த்துவைக்குமென்றும் கூறினுர்.

திரு. ஏச். எம். அபுகாமி உட்பட வேறு பலரும் பேசினர்.

இணைச்செயலாளர் திரு. ஐ. நடராசா நன்றி கூறினுர்.

## "விழா எடுப்பதினுல் மட்டும் சுகாதாரம் நடைமுறைக்கு வராது" — எம். பி.

களுவாஞ்சிக்குடி, திங். ''விழா எடுப்பதில் மாத்திரம் சுகாதரம் நடைமுறைக்கு வரமாட்டாது. தினசரி வாழ்க்கையில் சுகாதாரத்தை கவனித்தால் தான் நாம் சுகமாக வாழமுடியும்' என்று மன்முனை தென் எருவில் கிராமச் சபையால் நடத்தப்பட்ட மக்கள் சுகாதார விழா களுதவளை மாவித்தியாலயத்தில் நடந்த பொழுது அதற்கு தலைமைவகித்த பட்டிருப்பு பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஜப்பான் தேசத்து மக்கள் தங்களின் தெருக்களில் கூட ஓர் நெருப்புக்குச்சியோ சிகரெட்டையோ போடாது அதற்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள் பெட்டிக்குள் போடுவார்கள். இதே நோக்கு நம் நாட்டிலும் ஏற்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

புலவர் மணி திரு.ஏ.பெரியதம்பிப்பிள்ளை பேசுகையில் இளமையில் இருந்தே 'பிரமச்சரிய' வாழ்க்கையை கடைப்பிடித்து வந்தால் விவாகமாகிய பின்னும் பிரமச்சாரி வாழ்கை நடத்த மனம் இடம் கொடுக்கும் என்றும் அப்போது தான் அதிக பிள்ளைகளைப் பெற்று கஷ்டம் அனுபவிக்காமல் இருக்க முடியுமென்றும் பொருளாதாரம் பாதிக்கப் படவேண்டிய அவசியமில்லை என்றும் கூறினுர்.

பட்டிருப்பு மாவித்தியாலய அதிபர் திரு. இராசரத்தினம் உட்பட பலர் பேசினர். வெற்றி பெற்ருேருக்கு மட்டக்களப்பு மாவட்ட சுகாதார அதிபர் திரு. காங்கேசு பரிசில்களை வழங்கினுர்.

## நாட்டிலும் நகரிலும்

ஒரு சிங்களமங்கை அடையாறு கலாக்ஷேத்திரத்தில் பரதநாட்டியமும் கர்நாடக சங்கீதமும்பயின்று இலங்கை திரும்பியுள்ளார்என்ற செய்தியைக் கேட்டபோது எனக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை.

இலங்கையில் வாழும் சிங்களவர்களும் தமிழர்களும் எப்பொழுதாவது ஒரு காலத்தில் இசைந்து வாழ முடியுமென்று கனவு காண்பவர்களில் நானும் ஒருவன். இதற்கு இசை ஒரு நல்ல தூதாக இருக்கிறது.

எவ்வளவுதான் கசப்பான தென்றுலும் சிங்களவரிடம் ஒரு தனிப்பட்டஇசைமுறை இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அவர்களுடைய வண்ணம், கவி முதலிய நாட்டுப்பாடல்கள் தென்னிந்திய தெம்மாங்கு முதலியவற்றை ஒத்திருக்கிறது. அவர்களுடைய கண்டிய நடனத்தில் மலையாளத்தின் கதக்களி முழுக்க முழுக்க தெரிகிறது.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்புநாட்டுப்பாடல்களும் நாடகப்பாடல்களுமே சிங்கள சங்கீதமாய் இருந்து வந்தன. பிறகு சிங்கள இளைஞர்களிடையே சாஸ்திரிய சங்கீதம் பயில வேண்டுமென்று ஆசை பிறந்தது. என்ன காரணத்தினுலோ அவர்கள் வடஇந்திய சங்கீதத்தையே பயில விரும்பி சாந்திநிகேதனுக்கும் பாத்கண்டேக்கும் போனுர்கள். வடஇந்திய சங்கீதத்துக்கும் கர்நாடக சங்கீதத்துக்கும் வேற்றுமை மிகவும்சொற்பமானது என்பதை அவர்கள் அப்பொழுது உணரவில்லை. சிங்கள இனம் வங்காளத்திலிருந்து வந்தது என்பதற்காகவோ, தமிழ் சங்கீதத்திலுள்ள அடிப்படையான துவேஷத்தின் காரணத்தினுலோ அவர்கள் கர்நாடக சங்கீதம்பயில விரும்பவில்லை அதற்கு மாருக தமிழர் 'தரன்ஞு'என்று இழுத்து ராகம் பாடுவதை அவர்கள் கேலி செய்யவும் செய்தார்கள். இப்பொழுது அந்தநிலைமாறி விட்டதென்பதற்கு இந்தப் பெண் அடையாறில் கர்நாடக சங்கீதம் பயின்று திரும்பியதே ஒரு நல்லஅத்தாட்சியாகும்,

ஒரு சிங்களவர் எழுதிய சிங்களநாடகம் ஒன்று தமிழில்மொழிபெயர்க்கப்பட்டு கொழும்பில் அரங்கேறியுள்ளது. தமிழர் ஒருவர் எழுதிய சிங்கள நாடகம் கலைக் கழகத்தினுல் சிறந்ததென தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.சிங்களத்தில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் கலந்துவிட்டன. தமிழில் சிங்களச் சொற்கள் புகுந்துவிட்டன.

சமயத்தில் மட்டும் என்ன பிரமாதமான வித்தியாசம்? கதிர்காமக்கடவுளாகிய திருமுருகனையும் விஷ்ணுவையும்லட்சுமியையும்பௌத்த கோவில்களில் வழிபடுகிருர்கள். நயினுதீவுக்கு பௌத்தர்கள் வருகிருர்கள். கதிர்காமத்துக்கு தமிழர்கள் போகிருர்கள்.

சிங்களவர் கர்நாடக இசையை நன்கு பயின்று கச்சேரி செய்யக்கூடிய பருவம் வரும் நன்னுளை வரவேற்கின்றேன். அந்தக் கச்சேரிகளை சிங்களவரும் தமிழரும் கலந்து சீர்தூக்கிப் பார்த்து விமர்சனம் செய்யும் பொன்னுளை எதிர்நோக்குகிறேன்.

இசையின் மூலம் இரண்டு இனங்களும் ஒருமித்து இசைந்து வாழும் அந்தநாள் எப்போது வருமோ?

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் வருகை இன ஐக்கியத்துக்கு வழிகோலும்

## தமிழரசு மகாநாடு குறித்து பட்டிருப்பு எம். பி.

களுவாஞ்சிக்குடி, திங். பட்டிருப்பு எம், பி. திரு. எஸ்.எம். இராசமாணிக்கம் கல்முனையில் 23, 24, 25-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் 10-வது தேசிய மகாநாடு குறித்து பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"கல்முனையில் இம்மாதம் 23, 24, 25-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் 10-வது தேசிய மகாநாடு தமிழ்பேசும் மக்களின் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறலாம். சென்றதேர்தலின் பின் இலங்கை தமிழரசுக் கட்சி ஓர் தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு பிரதானபங்கு கொண்டது. இனத்துவேஷம் வளர்ந்து வந்த ஒருசூழ்நிலையில் தேசிய அரசாங்கத்தின் பிரதமர் இன ஒற்றுமையை ஏற்படுத்தி இந்நாட்டிலே ஓர் அந்நியோன்யமான நிலையைஏற்படுத்த எடுத்த முயற்சி பலனளித்திருக்கிறதெனக் கூறலாம் முதல்முறையாக இலங்கையின் பிரதமர் ஒருவர் தமிழரசுக்கட்சியின் தேசியமகாநாட்டுக்கு சமூகம்கொடுத்து உரையாற்ற ஏற்றுக்கொண்டது இழந்த உரிமைகளை மீட்டுத்தருவதிலும் ஒரு நிரந்தரமான ஒற்றுமையை ஏற்படுத்துவதிலும் மிகவும் அக்கறையாக இருக்ககிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது"

### சனசமூகநிலையங்கள்

# ஆத்மீகத் துறையிலும் பணி புரியவேண்டும்

### நீதியரசர் தம்பையா ஆலோசனை

வல் வட்டித்துறை, திங். "ஒரு நாட்டின் முன்னேற்றத்தற்குச் சனசமூகநிலைகளும் பெரும் பங்குகொள்கின்றன. பலதரப்பட்ட குணங்கள் படைத்த மக்களையும் நல்வழிப்படுத்தி நல்வாழ்வுக்கான பல போதனைகளையும் புரிந்து நல்ல முறை, தீயமுறைகளைத் தெளிவுபடுத்தி, நாட்டுமக்களையும் பண்புடையவர்களாக விளங்கச் செய்வதற்குச் சனசமூகசேவா நிலையங்களால் நடாத்தப்படும் இத்தகைய விழாக்கள் பெரும் துணைபுரிகின்றன. சனசமூகசேவா நிலையங்களின் கடமைகள் இத்துடன் நின்றுவிடாது தமிழ் வரலாறுகளை நாட்டிலே பரப்பித் தமிழ்க் கலைகலாசாரங்களை வளர்ப்பதுடன் ஆத்மீகத்துறையிலும் பணி புரியவேண்டும்."

வல்வை சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற வடமராட்சி சனசமூகசேவா நிலையங்களுக்கிடையேயான சமாஜ விழாவின்போது பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட நீதியரசர் டாக்டர் எச் டபிள்யு. தம்பையா கியு சி. பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ்விழாவில் வடமராட்சிப் பகுதியிலுள்ள சனசமூக சேவா நிலையங்கள் பங்குபற்றின மேற்படி நிலையங்களுக்கிடையே பேச்சுப்போட்டி, நாடகப்போட்டி, பாட்டு, நடனம், கிராமிய சம்பாஷணை, விளையாட்டுப் போட்டி ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

போட்டிகளில் வல்வை சனசமூகசேவா நிலையம் முதலாமிடத்தையும், சந்தாதோட்டம் சனசமூகசேவா சங்கம் இரண்டாமிடத்தையும், பொலிகண்டி பாரதி சனசமூகசேவா நிலையம் மூன்றாமிடத்தையும் பெற்றது

வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பருத்தித்துறை எ. பி. திரு. கே. துரைரத்தினம் உரை நிகழ்த்தினார்.

# "பிடரியில் பிடித்து மனைவியை கிணற்றுக்குள் தள்ளினர்"

## பெண் கொலை வழக்கில் மாணவன் சாட்சியம்

வல்வெட்டித்துறை, திங். "ஐயா ஐயோ என்ற சத்தம் கேட்டதும் படுத்திருந்த நான் எழுந்து சத்தம் கேட்ட திசையை நோக்கினேன். துரைராசா என்பவர் தனது மனைவியைப் பிடரியில் பிடித்து கிணற்றில் விழுத்தியதைக் கண்டேன். உடனே பயம் காரணமாக திரும்பவும் எனது படுக்கையில் போய் விழுந்தேன்"

வல்வெட்டித்துறையிலுள்ள கெருடாவில் கொலை வழக்கில் சாட்சியமளித்த செல்லத்துரை சபாநாதன் என்னும் மாணவன் மேற்கண்டவாறு சொன்னார். இவ் வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. பி. ஆர். சில்வா முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1966-ம் ஆண்டு வைகாசி மாதம் 24-ம் திகதியன்று கெருடாவிலைச் சேர்ந்த சிற்றம்பலம் துரைராசா என்பவர் தனது மனைவி அரியம்மாவை கிணற்றிற்குள் விழுத்தி கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

செல்லத்துரை சபாநாதன் தொடர்ந்து சாட்சியமளித்தபோது கூறியதாவது:

நான் ஜீ. சி. ஈ. வகுப்பில் சமயபாடமும் ஒரு பாடமாகப் படிக்கிறேன். பொய் பேசினால் பாவம் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். நான் தினமும் அப்பாவிற்கு உதவியாக அப்பா வீட்டிலேயிருந்து இரவு படித்துவிட்டு நித்திரை செய்வேன். சம்பவம் நடைபெற்ற தினத்தன்றும் நான் அங்கு தான் படுத்திருந்தேன். அதிகாலை 4-30 மணியளவில் 'ஐயோ ஐயோ' என்ற சத்தம் கேட்டது. நான் சத்தம் கேட்ட திசையை நோக்கிப் போய் அப்பாவின் வீட்டு எல்லைவேலி ஓரத்தில் நின்று பார்த்தேன். மனைவியை பிடித்து கிணற்றில் விழுத்தினார். கிணற்றில் விழும்போது ஒரு வரும் சத்தம் செய்யவில்லை. நான் இவற்றைப் பார்த்துவிட்டு பயத்தினால் படுக்கையில் திரும்பவும் போய்ப் படுத்தேன். அன்றையதினம் வழமைபோல் நான் நித்திரை விட்டு எழும்பவில்லை. அதனால் அப்பா என்னை எழுப்பினார். எழுப்பியதும் அப்பாவுக்கு நடந்தவற்றைச் சொன்னேன். அப்பா என்னை வீட்டிற்குப் போகும்படி சொன்னார். நான் வீட்டிற்குப் போய் அம்மாவுக்கு நடந்த விஷயத்தைச் சொன்னேன். அம்மா அழுதார்.

பின்னர் காலை 9 மணிக்கு மேல் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்தேன். அவ்விடத்தில் ஜனத்திரளும் பொலிஸாரும் நிற்பதைக் கண்டேன் சிறிது நேரத்தின் பின் மரணவிசாரணை அதிகாரிக்கு சாட்சியமளிக்கும்படி பொலிஸாரினால் கேட்கப்பட்டேன். அதன்

(6-ம் பக்கம் பார்க்க)

## தப்பியோட முயன்ற கைதிகள்

கண்டி, திங்கள் கண்டி போகம்பரைச் சிறைச்சாலையிலிருந்து ஏழு கைதிகள் தப்பியோட முயற்சிசெய்தனர். ஆனால் எதிர்பாராதவிதமாக அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. தப்பியோடத் திட்டமிட்டிருந்த 7 கைதிகளில் ஒருவருக்குத் தமது திட்டம் பற்றி ஏற்பட்ட அளவுக்கதிகமான ஆச்சரியம் தான் அவர்கள் தீட்டியிருந்த திட்டத்தையே முறியடித்திருந்தது.

இம்மாதம் 17ந் தேதி அதிகாலை சிறைச்சாலையிலிருந்து தப்பியோடத் திட்டமிட்டிருந்தனர். தங்கள் திட்டத்தை எண்ணியே ஒருவருக்கு அளவுக்கு மீறிய ஆச்சரியம் ஏற்பட்டது அதன்பயனாக மூர்ச்சையானார். அதிகாரிகள் அந்த

அவருக்குச் சிகிச்சையளித்துவிட்டு மூர்ச்சையானதற்கான காரணத்தைக் கேட்ட போது தமது திட்டம் பற்றி வெளியிட்டுவிட்டார் அவர். இதிலேயே இந்தத் திட்[illegible]

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், செவ் மானிப்பாய் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும். வித்துவான் க. வேந்தனார், செல்வி இ. இலக்ஷ்மி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## வெள்ளக்கொடுமை

டாக்கா, ஜூன் 20 கிழக்குப் பாகிஸ்தானில் வெள்ள நிலைமை மோசம் அடைந்திருக்கிறது. ஒன்பது நதிகளில் இங்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

## ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை

பம்பலப்பிட்டி, திங் பண்டாரகமவில் இரண்டாவது ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்குக் கைத்தொழில் அமைச்சின் அபிவிருத்திப்பகுதி அங்கீகாரம் வழங்கியுள்ளது. அடுத்த நிதியாண்டுக்கான கைத்தொழில்துறை அபிவிருத்திச் செலவினங்களில் இரண்டாவது ஒட்டுப்பலகைதொழிற்சாலையையும் நிறுவுவதற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது அட்டைத்தாள் தொழிற்சாலை நிறுவப்படவிருந்த அதேயிடத்தில் இந்த இரண்டாவது தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது.

ஜிந்தோட்டையிலுள்ள தற்போதைய ஒட்டுப்பலகைத் தொழிற்சாலையில் நாட்டுக்குத் தேவையான ஒட்டுப்பலகையில் 40 சதவிகிதத்தை உற்பத்திசெய்கின்றது.

இரண்டாவது தொழிற்சாலையும் நிறுவப்பட்டுவிட்டால் நாட்டின் ஒட்டுப்பலகைத் தேவை பூர்த்திசெய்யப்பட்டுவிடும். இதன் மூலம் 15,000,000 ரூபா வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுத்தப்படும்.

# கல்முனை நோக்கி செல்கிறார்கள்

யாழ்ப்பாணம், செவ் தமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மகாநாடு இம்மாதம் 23ந் தேதி கல்முனையில் ஆரம்பமாவதையொட்டி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்களும் அனுதாபிகளும் கல்முனைக்குப் பிரயாணமாகிக்கொண்டிருக்கின்றனர்.

வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மோட்டார்கார்கள், மோட்டார் வான்கள், இ. போ. ச. பஸ்கள் மூலம் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

### விசேஷ பஸ்

நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் விசேஷ பஸ்கள் திருக்கோணமலைக்குச் சென்று கோணேசராலயத்தில் சுவமி தரிசனம் செய்துகொண்டு, கன்னியாய் வெந்நீரூற்றுக்கிணறுகளையும் பார்வையிட்டு, தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கென வாங்கப்பட்டுள்ள இடத்தையும் பார்த்தபின் கல்முனைக்குச் செல்வர்.

# மகாநாட்டுக்கான ஒழுங்குகள் பூர்த்தி

கல்முனை, திங்கள் கல்முனை மகாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கான ஒழுங்குகள் மிகவும் வேகமாக நடந்துகொண்டிருக்கின்றன. 25-ம் திகதிகாலை பிரதமமந்திரி டட்லி சேனநாயக்கா, ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆகியோர் மட்டக்களப்பு விமானநிலையத்தில் பாராளுமன்றப் பிரதிநிதிகளாலும், பிரமுகர்களாலும் வரவேற்கப்பட்டு மோட்டார் பவனியாக கல்முனைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். இவர்கள் 6 மணியளவில் கல்முனைக் கடற்கரைமைதானத்தில் நடக்சுகவிருக்கும் பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள்.

24-ம் திகதி கட்சியின் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் பல முக்கிய பிரேரணைகள் 25-ம் திகதி பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்படும். தமிழ் பேசும் மக்களுடைய எதிர்காலம், உரிமைகள் உட்பட பல முக்கிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படுமென அறியப்படுகிறது. எதிர்வரும் ஆண்டிற்குத் தலைவராக நியமிக்கப்படும டாக்டர் திரு. எம். வி. நாகநாதன் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

24-ம் திகதி காலை கொடியேற்றத்தோடு ஆரம்பிக்கப்படும்மகாநாடு, தொழிலாளர் மகாநாடு; மாதர் மகாநாடு, கலாச்சார மகாநாடு என பிரித்து நான்கு பகுதிகளாக நடைபெறும். 25-ம் திகதி பிற்பகல் பெரிய நீலாவணையில் இருந்து தலைவர் திரு. ஈ. எம். வீ. நாகநாதன் ஊர்வலமாக அழைத்துச்சென்று கல்முனை கடற்கரை மைதானத்தில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வர். வெளியூர்களில் இருந்து வரும் ஆயிரத்திற்குமதிக மாணவர்கட்கு உணவு, தங்குமிடம் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## கைகலப்பை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர். மேலும் கைகலப்புகள்நடைபெறாமல் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## ஆறு மாத . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தஸ்தாவேஜுகளையும் கவனிக்கமுடியும். ஆறுமாதகால லீவு வழங்க முடியாவிட்டால், ஒன்பதுமாத காலத்துக்கு தினசரி இரண்டுமணி நேரத்துக்கு எங்களுக்கு, வேலைநேரத்தில் 'லீவு' வழங்கவேண்டும்" என்று இவர்கள் கோரியுள்ளனர்.

இதற்கிடையே, சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற அரசாங்க ஊழியர்களின் நிலைமையை அரசாங்கம் ஆராயவிருக்கிறது

சிங்களத்தில் தாங்கள் தேர்ச்சிபெற்றபோதிலும் தங்களுக்கு நிறுத்தப்பட்ட சம்பளஉயர்வு இன்னும் வழங்கப்படவில்லை என்று சில தமிழ் அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்துக்கு முறையிட்டுள்ளனர்.

தங்களுக்குப்பதவியுயர்வளிக்கப்படுவதில் தாமதம் மேற்கொள்ளப்படுவதாகச் சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற வேறுசில தமிழ் அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்திடம் புகார் தெரிவித்துள்ளனர்.

## கோதபாய கொலை விசாரணை

### புதிய தகவல்கள் அம்பலம்?

கொழும்பு, திங்கள் கோதபாய கொலையில் சம்பந்தப்பட்டவரென சந்தேகிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து இப்போது புதிய தகவல்கள் அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளன!

செல்வி பொலின் என்ற இந்தப் பெண்ணை விசாரணை செய்த இரகசியப் பொலிசார் அவரின் உபயோகத்திலிருந்த டயரியில் உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்களின் பெயர்கள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

மார்ச் 10-ந் திகதி தெஹிவளையில் கோதபாய என்ற இந்த பதினொரு வயதுச்சிறுவன் கிணற்றுக்குள் இறந்து கிடக்கக்காணப்பட்டான். யாரோ கிணற்றுக்குள் விழுத்திக் கொலை செய்திருப்பதாக பொலிசார் சந்தேகித்தனர். இதனைத்தொடர்ந்தே பொலின் என்ற பத்தொன்பது வயதுப் பெண்ணும் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இரகசியப் பொலிசார் நடத்திய விசாரணையிலிருந்து செல்வி பொலினுக்கும் உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருந்துவந்திருக்கிறதெனத் தெரியவந்துள்ளதாம்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரூஸ்வெல்டின் ராஜ தந்திரம்

இரண்டாவது உலக மகா யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்தபோது சேர்ச்சில், ரூஸ்வெல்ட, ஸ்டாலின் ஆகிய 'மூன்று பெரிசு'களும் டெஹிரான் நகரத்தில் சந்தித்தார்கள். அமெரிக்க தூதரகத்தில் தங்கியிருந்த ரூஸ்வெல்டை, ஏதாவது சதி நடக்கலாமென்று தாம் சந்தேகப்படுவதாகக் கூறி, ஸ்டாலின் தம்முடன் சோவியத் தூதரகத்தில் தங்கும்படி கேட்டார். ரூஸ்வெல்ட் சதிக்கதையை நம்பவில்லை என்றாலும் ஒப்புக் கொண்டார். சேச்சசில் அடுத்த கட்டிடத்திலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் இருந்தார்.

இப்படி மூவரும் ஒருவருக்கொருவர் மிக அண்மையில் இருந்தும் அவர்களுடைய பேச்சுக்கள் பெரிய உத்தியோக தோரணையில் நடந்தனவேயன்றி அவர்கள் தாராளமாக மனம் விட்டு அளவளாவி சிரித்துப் பேசுவதற்கு ஏதோ ஒரு மறைமுகமான முட்டுக்கட்டை இருப்பது போலத் தெரிந்தது.

ஸ்டாலின் மகாநாட்டிற்கு வரும்போதெல்லாம் விறைப்பாக வந்து உட்கார்ந்து பிடித்துவைத்த பிள்ளையார் மாதிரி இருப்பார். சிரிக்கவே மாட்டார். ஸ்டாலினை எப்படிச் சிரிக்கவைக்கலாமென்று யோசித்து ரூஸ்வெல்ட் ஒரு தந்திரம் செய்தார். அன்று மகாநாட்டுக்குப்போகும்போது, 'வின்ஸ்டன், நான் ஒரு காரியம் செய்யப்போகிறேன், குறை நினைத்துக் கொள்ளாதே, என்று எச்சரிக்கை செய்தார். ரஷ்யருக்கு விளங்காத ஆங்கில பாஷையில் தானும் சேர்ச்சிலும் பேசிக் கொள்வதையிட்டு அவர்கள் ஒரு விதமாக நினைக்கிறார்கள் என்று ரூஸ்வெல்ட் ஊகித்தறிந்து கொண்டார்.

மகாநாட்டு அறைக்குள் நுழைந்தவுடனேயே அவர் ஸ்டாலினிடம் தனியாகப் போய் ஏதோ குசுகுசுத்தார். அவர் சொன்னதில் ஒன்றும் புதிதாக இல்லை, என்றாலும் உடனே மற்ற ரஷ்யர்களும் ஓடிவந்து கேட்டார்கள். இந்த சம்பாஷணை மிகவும் அன்யோன்யமாகக் காணப்பட்ட போதிலும் ஸ்டாலின் முகத்தில் ஈயாடவில்லை. அவர் சிரிக்கவேமறுத்து விட்டார். ரூஸ்வெல்ட் அதோடு விடவில்லை.

கையால் வாயை மறைத்துக்கொண்டு ஸ்டாலின் காதுக்குள் மீண்டும் இரகசியமாகச் சொன்னார். 'வின்ஸ்டன் என்ன மூஞ்சியை ஒரு மாதிரி வைத்திருக்கிறார், நரி முகத்தில் விழித்து விட்டாரோ?'

ஸ்டாலின் முகத்தில் லேசாகப் புன்னகை வட்டமிட்டது. ரூஸ்வெல்டுக்கு உடனே தந்திரம் பிடிபட்டு விட்டது. சேர்ச்சிலை அடிக்கடி கிண்டல் செய்தார், அவருடைய 'ஜோன் புல்' உருவம் சுருட்டுகள் எல்லாவற்றையும் கேலி பண்ணினார். வின்ஸ்டனின் முகம் சிவந்து போகும். மூஞ்சியை 'உம்' என்று வைத்துக் கொள்வார்.

இதைப்பார்த்த ஸ்டாலின் கொஞ்சம் கொஞ்சமாகபுன்னகை அரும்பி இறுதியில் ரூஸ்வெல்டுடன் சேர்ந்து உரத்துச்சிரிக்கத் தொடங்கி விட்டார்.

# குறி தவறி விட்டது'

இராணுவ தளபதி ஜெனரல் பாற்றன் காலிபோர்ணியாவில் நடந்து கொண்டிருந்த பட்டாள ஒத்திகைகளைப் பார்ப்பதற்கு ஒரு ஜீப்பில் வேகமாக சென்று கொண்டிருந்தார்.

திடீரென்று 'நிறுத்து' என்று கத்தினார் அந்த அமெரிக்க படைத் தலைவர். ஜீப் நின்றது

மிகவும் அவசரமாக இறங்கி ஓடிப்போய் ஒரு டெலிபோன் கம்பத்தை உற்று நோக்கினார்.

அங்கே உயரத்தில் ஓர் இளைஞன் ஏதோ பழுது பார்த்துக் கொண்டிருந்தான். ஜெனரலுக்கு அவனைப் பார்க்கப் பார்க்க அடக்க முடியாத கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது 'இறங்கடா கீழே!' என்று முழங்கினார்.

பையன் அசையவில்லை. போசாமல் உட்கார்ந்திருந்தான். 'டேய், என்னடா காது செவிடா? உடனே இறங்கு கீழே!'

அவன் சாவகசமாக இறங்கினான் இறங்கியவன் 'சலாம்' போட்டானா? அதுவுமில்லை.

'டேய், இதென்னடா உன்னுடைய உடை? என்னை பிசுக்கு பிடித்திருக்கிறது! சப்பாத்துக்கள் சரியாக முடிச்சு போடப்படவில்லை. தலை சீவப்படவில்லை. க்ஷவரம் செய்யவில்லை. பொத்தான்கள் மினுக்கப்படவில்லை. என்னுடைய பட்டாளத்தில் உன்னைப்போன்றவர்கள் இருப்பது எனக்கு பெரிய அவமானமாயிருக்கிறது. உன் பெயர் என்ன? நீ எந்த பிரிவை சேர்ந்தவன்? உடனே சொல்! என்று கதறினார் தளபதி.

இளைஞன் மிகவும் சாவதானமாக பதில் சொன்னான்.

'என் பெயர் ஜோன் மில்லர். நான் காலிபோர்னியா டெலிபோன் பிரிவைச் சேர்ந்தவர். நீ நேரே யமலோகத்துக்குப் போகலாம்!'

பாற்றன் வெடிகியே போனார்.

# மூளை சுறுக்கு கணம்

செல்றவார விடைகள்

1. 3 அங்குலம், தட்டு சுழலுப ஊசி ஒரே நிலையில் நிற்கும்.
2. 'தமிழில் ஒரு வார்த்தை'

# அதிசயம், ஆனால் உண்மை

ஒரு பெரிய கட்டடம், ஒரு தொழிற்சாலை, ஒரு பெரும் கப்பல், ஒரு நகரம்—எதையும் சிறிய அளவில் 'மொடல்' செய்துவிடலாம் நாம் வாழும் இந்த பூமியை சிறு பூகோளமாக்கி பூமிசாஸ்திரம் படிப்பிக்கிறார்கள். ஆனால் இந்த பிரபஞ்சம் முழுவதையும் ஒரு சிறிய 'மொடலா'க செய்வது முடியவே முடியாது. ஏன் தெரியுமா?

பூமியை ஓர் அங்குல விட்டமுள்ள ஒரு சிறு பந்து போல செய்து காட்டினால் பூமிக்கு மிகவும் சமீபத்திலுள்ள 'அல்ஃபா சென்ரோறி' என்ற நட்சத்திரத்தை 50,000 மைல் தூரத்தில் வைக்கவேண்டும்!

ஃ ஃ ஃ

சீன தேசத்தில் மீன் பிடிப்பதற்கு 125 முறைகளை கையாளுகிறார்கள். இவை எல்லாவற்றுள்ளும் மிகவும் எளிமையானதும் சூட்சுமமானதும் ஒன்று இருக்கிறது அதில் வலையோ தூண்டிலோ, ஈட்டியோ வேறெந்த ஆயுதமோ உபயோகிக்கப்படுவதில்லை. மீன் பிடிக்கும் தோணியின் ஒரு பக்கத்தில் வெள்ளை நிறப் பூச்சு அடிக்கப்பட்ட ஒரு நீளமான பலகை 45 பாகையில் பொருத்தப்பட்டிருக்கும். நிலவொளியில் இது பளபளவென்று பிரகாசிக்கும். இதைக்கண்ட மீன்களுக்கு அதற்குமேல் துள்ளிப்பாயவேண்டுமென்று ஆவல் பிறந்துவிடும். பிற உதவியின்றி அவை தாமே தோணிக்குள் பாய்ந்து விழும்.

சொர்ணரின் வர்ணனைகள்

# தவில் வாசிப்பில் ராகம் கண்டு பிடிக்கும் வித்தை!

திருவிழா பார்ப்பதில் கலையரசு சொர்ணலிங்கத்தார் பெரிய சமர்த்தன். எங்கேயாவது திறம் திருவிழா நடக்கட்டும்; அங்கே அவரைக்காணலாம் திருவிழாவில் அவர் வேடிக்கை பார்க்க வருவதில்லை. ஒரு மூலையில் காரை நிறுத்தி விட்டு அதற்குள் இருந்தவாறே நாகசுரக் கச்சேரிகளையும் இதர கலை நிகழ்ச்சிகளையும் கேட்டு ரசித்துக் கொண்டிருப்பார். நாடகம் என்றால் அநேகமாக அவரும் அதில் சம்பந்தப்பட்டிருப்பார். எனவே நேரில் மேடைக்குப் போய்விடுவார். இத்தனை வயதாகியும் அவர் நித்திரையில்லாமல் இரவில் வெகுநேரம் முழித்துக் கொண்டு திருவிழா பார்ப்பது பலருக்குப்பெரும் அதிசயமாயிருக்கும். சங்கீதத்திலும்நாடகம் முவியவற்றிலும் அவருக்குள்ள ஆர்வமே அப்படி அவரைச் செவியத் தூண்டுகிறதென்று சிலர்தான் அறிவார்கள்.

கொழும்பில் செட்டித் தெரு செம்மாங்கோடு பிள்ளையார் கோயிலில் ஆடிவேல் உற்சவம் நடந்து கொண்டிருந்தது. திருவீழிமிழலை சுப்பிரமணியம் சகோதரர்கள் நாகசுரம் வாசித்துக் கொண்டிருந்தார்கள். நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தவில் வாசித்தார். அற்புதமான வாத்தியம். ஏகப்பட்ட ரஸிகர் கூட்டம்.

நாகசுர வித்வான்கள் ஒரு ராகத்தை வாசித்து விட்டு சிறிது நேரம் இளைப்பாறி தவில் வித்வானை வாசிக்கவிட்டார்கள் அந்தச் சமயம் தான் சொர்ணர் போய்ச்சேர்ந்தார். நீடாமங்கலத்தார் அரை மணி நேரம் தவில் வாசித்தர். இடையில் ஒரு செட்டித் தெரு கடை முதலாளி சொர்ணரிடம் வந்து, ஐயா, என்ன ராகம் வாசிக்கிறார்கள்?' என்றுகேட்டார்.

சொர்ணர் கொஞ்சமும் தயங்காமல் 'ஆனந்த பைரவி' என்றார்.

'இல்லை ஐயா, இது மத்திமாவதி! என்றார்' கடை முதலாளி. சொர்ணர் உடனே தவில்காரருக்குக் கிட்ட நெருங்கிப்போய் நின்று உற்றுக்கேட்டுவிட்டு திரும்பி வந்து, 'இல்லை ஆனந்த பைரவிதான்' என்றார். இதற்குள் வேறுபல கடை முதலாளிகளும் கூடி விட்டார்கள். சொர்ணர் ஆனந்த பைரவியே தான் என்று அடம் பிடித்தார். கடை முதலாளி 'இல்லை, மத்திமாவதி' என்று பந்தயம் பிடித்தார். இன்னொரு பெரியமுதலாளி இடையில் குறுக்கிட்டு 'நீங்கள் எப்படி ஆனந்த பைரவி தான் என்றுதிடமாகக் கூறுவீர்கள்' என்று சொர்ணரைப் பார்த்துக் கேட்டார்.

இவர் உடனே தலையைக் குனிந்துதவிலுக்கருகேசெவி சாய்த்து மிகவும் உன்னிப்பாக தவில் வாசிப்பைக் கேட்பவர் போல் பாவனை செய்துவிட்டு திரும்பி வந்து 'ஆனந்த பைரவி தான்' என்றார்.

தவில் வாத்தியம் முடிந்து திருவீழிமிழலையார் ஊதத் தொடங்கினார், வந்தது ஆனந்த பைரவி தான்!!

உடனே முதலாவது முதலாளி அருகில் நின்ற ஒரு சங்கீதம் தெரிந்தவரிடம் 'இது என்ன ராகம்?' என்று கேட்க அவர் ஆனந்த பைரவி தான் என்று உறுதிப்படுத்தினார்.

இரண்டாவது முதலாளிக்கு இது பெரும் அதிசயமாய் 'தவில் வாசிப்பிலிருந்தே ராகத்தைக்கண்டுபிடிக்கிறாரே இந்தமனிதர்' என்று நினைத்து சொர்ணரை தமது கடைக்குக் கூட்டிக்கொண்டு போய் லட்டு, ஜிலேபி, அல்வா, மைசூர்பாகு, வாழைப்பழம் எல்லாம் தாராளமாகவழங்கினர். சொர்ணர்ஐயாவின் குஷியை கேட்கவேண்டுமா?

அவர் தூரத்தில் வரும் போதே நாகசுரகாரர் ஆனந்தபைரவி வாசித்ததை கேட்டுக்கொண்டு வந்திருக்கிறாரென்ற உண்மை முதலாளிமாருக்குத்தெரியாது !!

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பீ.

## பாளைமுகங் காணீரோ!

பத்தனின்குடிலுக்கு பாளைமுகங்காணச்சென்றார் பலர். 'சைவ மரபில் வந்த கரிக்குருவி முதலியார், கொப்பாட்டன் மகன் நப்பூதனார், இரு மரபுந்தூய பேராயிரமுடையாள் வழிவந்த நரசிங்கதேவர், குன்மங்கண்ட குலோத்துங்க மாப்பாண முதலியார், காமாளை நன்னியர், கருங்குட்டமுத்து ராமலிங்கையர், திருநீற்றுச்சேந்தனார், பவானந்தர். கல்லூரி முதல்வர் கண்ணப்பர், சுப்பர்மாதாத்தை. பொக்கை வாய் முத்துப்பிள்ளை, சட்டககல்லூரி மாணவன் கூத்துமன், கல்லூரி மாணவர் குழாம். செல்லூர் ஆசான், தினவெறித்திகம்பர அடிகளார், வழக்கறிஞர், பிணக்கர், கணக்கர் என்போரும் அவர் போல்வார் பிறருமாவர்?

இவர்கள் யாவரும்கொட்டிலைச் சுற்றி இருந்தபடி பனை வடலைப் பார்த்து கனவு காண்கிறார்கள்.

பூலோக கற்பதருபூம்
பாளை யீனப்புத்தமுதம்
வைத்தபல பொற்கல
சம் மான மேலான வட்
டுகளில் முட்டியினம்
மேவ விடியுமட்டுங்
காணாத கனவென்ன
கனவே வேறாகக் கண்
பார்தங் கனவென்ன
கனவே!

இதற்கிடையில் பத்தன் சுறுசுறுப்பாய் வேலையைக் கொண்டு போனான். 'அவன் காலிலே தோல்மாட்டி, அரையிலே கச்சணிந்து. இடுப்பிலே ஏறுபெட்டிதளைநார் கொளுவித் தலையிலே உறுமால் கட்டி, மலர்ந்த முகமும் குளிர்ந்த சொல்லும் நிறைந்தநெஞ்சும் உடையேனாய்த் தன் பனந்தோப்பிற்றானே சமைத்த சிறு குடில் மருக்கிற்போந்தான் பாளை முகங்கண்டது முதல் நாற்பத்தெட்டுநாள் காறும் நோன்பு பூண்டு, பங்குனி உத்திரப்பெருநாளிற் 'பாறனை' முடித்துக் காப்பவிழ்த்து மகேசுர பூசையும் மரபிற் பிறழாது நிறைவேற்றிக் கொண்ட 'வைதிககுழாம்' வாயூறிக்கொண்டு வந்து அச்சிறு குடிலின் நாற்புற முங் குழுமிற்று. வைதிக சைவம் வாழ்க!'

'பத்தன் நாட்பூசை முடித்துக்கொண்டதும் குடில் மருங்கிலே தொங்கவிட்டிருந்த புதுப் பிழாக்களை எடுத்து மரபும் வரிசையுந் தவறாது முறை முறை வழங்கினான். அவற்றை எல்லோரும் இரு கையிலும் ஏந்திக் கண்களில் ஒற்றிப் பதுமாசனத்தில் இருந்து மடிமிசை வைப்பராயினர். வைதிக சைவம் வாழ்க, வாழியர், வாழிய, வாழி!

அடுத்த

'பஞ்சாமிர்தம்'

(29-6-66)

பத்தன் தனது இருக்கு வேதத்திலே ஞான காண்டத்திலே நடுநின்ற பத்தாம் மண்டிலத்திலேயுள்ள தாரக மந்திரத்தை ஒரு கூப்பிடு தூரங்கேட்க ஓதினான்!

"ஓம் சவ்வும் சதையும்
ரெண்டும்
ஓம சுள்ளும் வடையும்
சுண்டலும்
கள்ளுக் கொள்ளா வயிறும்
இல்லை
மூள்ளுக் கொள்ளா வேலியு
மில்லை
ஓம் கொற்றவை ஓம்
வெற்றி ஓம்
கள்ளுக்குக் கணவன்
கதை ஓம்
ஓம் வருக ஓம் வருக
ஓம் நமோ!"

(பண்டிதர் சோ. இளமுருகனாரின் 'வேனில் விழா' என்ற அங்கதநூலிலிருந்து).


# "பிடரியில் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

படி நடந்த சம்பவத்தை அவரிடம் சொன்னேன்.

இராமலிங்கம், தருமலிங்கம் ஆகியோர் சாட்சியமளித்த பின் விசாரணை இம்மாதம் 24-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பி உதவியுடன் அட்வக்கேற் திரு. எம். சிவசிதம்பரம் ஆஜரானார். வழக்காளி சார்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சி. பத்திரானா, வழக்கறிஞர் திரு. கே. இரத்தினசிங்கம் உதவியுடன் அட்வக்கேற் திரு. எஸ். கண்ணுத்துரை ஆஜரானார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசியல் பற்றி நீதிமன்றத்துக்கு கவலையில்லை"

— மாஜிஸ்திரேட்

காலி, திங்கள்

நீர் அரசாங்க ஆதரவாளனாயிருப்பதும் எதிர்க்கட்சி ஆதரவாளனாயிருப்பதும் வேறு விஷயம். உமக்கு அரசாங்கத்தில் விருப்பமில்லையென்றால், ஜனநாயக முறைப்படி மாறலாம். ஆனால் இந்த விதத்தில் மாற்ற முயற்சிக்கக்கூடாது.

மதகொன்றை உடைத்து சேதப்படுத்திய வழக்கொன்றில் மாஜிஸ்திரேட் திரு. சுவாரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கில், ஏச். கே. அமரதாசா, ஏச். கே. அந்திராஸ், ஜி ஜி. சோமதாசா, டபிள்யு. ஜி. அல்பேட் ஆகிய நான்கு வாலிபர்களும், ஜனவரி மாதம் 8-ம் திகதி மதகொன்றை உடைத்து சேதப்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

யாராவது மதகை உடைத்து சேதப்படுத்த முயற்சித்தால் ஒன்றும் அறியாத மக்கள் அதனால் பாதிக்கப்பட்டு, காயமடைவார்களென்றும், அப்பாதையால் ஒரு வாகனம் செல்ல நேரிட்டால், அது மிகவும் ஆபத்தானதாயிருக்குமென்றும், யாராவது இதைச் செய்திருந்தால், தான் கடுமையாக கவனம் செலுத்தப் போவதாகவும், அரசியல் பற்றி நீதிமன்றத்திற்கு அக்கறையில்லையென்றும், மாஜிஸ்திரேட் மேலும் கூறினார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆ. ஏ. ஜே. டபிள்யு. சேரசிங்க ஆஜரானார். விசாரணை ஜூலை மாதம் 7-ம் திகதிவரை ஒத்திபோடப்பட்டது.

## அல்வாயில் சுகாதாரவிழா

வல்வெட்டித்துறை, வியா.

அல்வாய் வட்டார சுகாதார வாரவிழா அல்வாய் மெதடிஸ்ட்மிஷன்பாடசாலை மண்டபத்தில் டாக்டர் ஏ. வி. ஜீவநாயகம் தலைமையில் நடைபெற்றது.

குடும்பநலத்திட்டம் பற்றி டாக்டர் என். பாலகிருஷ்ணனும் சுகாதாரத்தின் பலன் என்னும் பொருள்பற்றி சுகாதார விரிவுரையாளர் திரு. எஸ். பொன்னம்பலமும் உரைநிகழ்த்தினர். மற்றும் பேச்சுப்போட்டிகளும், கருத்தரங்கும் இடம் பெற்றன.

## உப தபால்கந்தோர் தரம் உயர்ந்தது!

வட்டுக்கோட்டை, திங்

நாகேந்திர மடம் உப-தபால் கந்தோரை வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ, அமிர்தலிங்கம் திறந்து வைத்தார் இந்த உப தபால் கந்தோர் 'பி' பிரிவுக்கு உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த திறப்பு விழா நடைபெற்றது.

வடபகுதி தபாற்கந்தோர் அத்தியட்சகர் திரு எஸ். ஆறுமுகம் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

பார்லிமெண்ட் அங்கத்தவர்களின் விடாமுயற்சியினால் இத் தபாற்கந்தோர் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறதென்று திரு க. சுப்பிரமணியம் தமது தலைமையுரையில் கூறினார்.

திருவளர்கள் க. கந்தையா, கு. தில்லைபம்பலம், க. நடராசா, க. சின்னத்துரை, க. ஆனந்தன், சா. நாகமுத்து ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## விவசாயப் பயிற்சி கல்லூரிக்கு வசதிகள்

### உதவிகல்வி டைரக்டர் வாக்குறுதி

வவனியா, திங்கள்

உதவி கல்வி டைரக்டர் திரு வி. துரைசிங்கம் சமீபத்தில் வவனியா விவசாய ஆசிரியர் பயிற்சி கல்லூரிக்கு விஜயம் செய்தபொழுது அந்த நிலையத்தின் நிலைமை குறித்து பரிசிலனைசெய்தார்

நிலையத்துக் தண்ணீர்கு வசதி, படுக்கைவசதி, வெளிச்ச வசதிகளைச் செய்துதர முயற்சிகள் செய்வதாகவும் கல்லூரிக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதாகவும் அவர் வாக்களித்துள்ளார்.

வவனியா எம். பி திரு. சிவசிதம்பரம், உதவி கல்வி டைரக்டரைச் சந்தித்து இசை ஆசிரியர்களுக்கு நியமனங்கள் ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொண்டனர். அவர் கோரிக்கையை இம்மாத இறுதிக்குள் நிறைவேற்ற முயற்சி செய்வதாக அவர் வாக்களித்திருப்பதாகத் தெரிகின்றது

## இருதய நோய் அதிகரிப்பு

பம்பலப்பிட்டி, திங்கள்

இலங்கையில் தற்போது இருதய நோய், சலரோகம் ஆகியன்வ அதிகரித்துவருவதாக சுகாதார இலாகாவின் புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவருகிறது சென்ற வருடத்தில் இலங்கையின் ஜனத்தொகையில் அநேகம் பேர் இருதய நோய்கள் காரணமாகவே இறந்துள்ளார்கள்.

## உப தேர்தல்

கண்டி, திங்கள்

கண்டி மாநகரசபையின் மாபனவத்துற வட்டாரத்துக்கான இடைத்தேர்தலில் ஐ தே.கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நேரடியாக போட்டியிடவிருக்கின்றன.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை மாலை புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது. வித்தியாதரிசி திரு. சி. ஏ, ஞானசேகரம் தலைமைவகிப்பார்.

ஃ ஃ ஃ

காங்கேசன்துறை அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது, காங்கேசன்துறைப் பட்டினசபைத்தலைவர் திரு. ஏ. வி, சதாசிவம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஃ ஃ ஃ

சாவகச்சேரி இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமைமாலைநடைபெறவிருக்கிறது. திரு வீ. ஏ. கந்தையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## கொழும்புநகரும் பெயர் மாற்றமும்

பம்பலப்பிட்டி, திங்கள்

கொழும்பு நகரிலுள்ள தெருக்களினதும், ஒழுங்கைகளினதும் பெயர்கள் மாற்றப்படுவதுபற்றி நகரபிதாக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி யடைந்துள்ளார்களெனினும் பெயர் மாற்றவேலை வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நகரின் உதவி மேயரும் பல அங்கத்தவர்களும் இதை ஆட்சேபிக்கின்றனர். ஆனால் நகர வீடமைப்பு, சீர்திருத்தக்கமிட்டி தெருக்களின் பெயர்களை மாற்றிக்கொண்டேவருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவம் பொலிஸ் கூட்டு மகாநாடு

# நிரந்தரக்காரியதரிசி தலைமையில் நடைபெறும்

## வேலைநிறுத்தவிளைவுகளை சமாளிக்க ஏற்பாடு

கொழும்பு, ஞாயிறு

**நாட்டில் உருவாகிவரும் வேலைநிறுத்தப் பயமுறுத்தல்களின் காரணமாக நிகழக் கூடிய எந்தவித அசம்பாவிதச் சம்பவங்களையும் சமாளிப்பது பற்றி ஆலோசித்து முடிவுகள் மேற்கொள்வதற்காக இந்த வாரத்தில் முப்படைகளையும் சேர்ந்த தளபதிகளும் பொலிஸ் உயர்தர அதிகாரிகளும் முக்கிய மகாநாடு ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.**

இந்த மகாநாடு பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஜி. வி. பி. அமரசிங்க தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

வேலைநிறுத்தங்களின் போது பலாத்காரச் சம்பவங்களை ஏற்படுத்துவதற்கு மறைமுகமான திட்டங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக இரகசியப் பொலிசின் விசேஷப் பகுதியினர் நிரந்தரக்காரியதரிசியிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

15 கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ள கூட்டாட்சிகட்சிகளின் சார்பு தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கைகள் நிறைவேறுவிடில்வேலைநிறுத்தத்தில் இறங்கப்போவதாக அறிவித்திருப்பது இங்கு சுட்டிக் காட்டுவது அவசியமாகும். இந்த 15 கோரிக்கைகளில் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்தின் காரணமாகப் பதவிகளை இழந்தவர்கள் மீண்டும் வேலைக்கமர்த்தப்படவேண்டுமென்றது முக்கியமானதாகும். இந்தக் கோரிக்கையையொட்டி நாட்டில் பலாத்கார சம்பவங்கள் தலைதூக்கக்கூடும் என்று அரசாங்கம் கருதுவதால் அப்படியான நிலையை உருவாகாமல் தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை செய்ய முனைந்திருக்கிறது.

ராணுவம், மற்றும் கப்பல், விமானப்படைகளைச் சேர்ந்த எல்லா வீரர்களையும் முகாம்களுக்கு வெளியிருக்கப்படாதென்றும் முகாம்களிலேயே தங்கியிருக்கும்படியும் பணிக்கப்பட்டுள்ளனர்.

---

காங்கேசன் துறைமுகம்

# செலவு குறைந்த துறைமுகமாக்கப்படும்

## அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு, ஞாயிறு

காங்கேசன் துறைமுகத்தை செலவு குறைந்த துறைமுகமாக சீர்திருத்த அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது அப்படிச் செய்வதின்மூலம் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் துரிதமாகவும் இலகுவாகவும் நடைபெறுவதற்கு வசதியேற்படும் என்று கருதப்படுகின்றது.

இந்திய அரசாங்கம் சேதுசமுத்திரத்திட்டத்தை அமுல் நடத்தி தென்இந்தியாவில் சிறந்த துறைமுகம் ஒன்றை நிர்மாணிக்கவிருப்பதால் அதனால் இலங்கை பாதிக்கப்படும் என்பதால், காங்கேசன் துறைமுகத்தை நவீன முறையில் புதுப்பித்து தென்கிழக்காசியப் பிரதேசங்களுக்கு வரும் கப்பல்களையும் இங்கு ஈர்ப்பதற்கு யோசிக்கப்பட் வருகின்றது.

காங்கேசன் துறைமுகத்தைஅபிவிருத்திசெய்ய ஏற்கனவே 2 கோடி 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. காங்கேசன் துறைமுகத்தை செலவு குறைந்த துறைமுகமாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்று இதுபற்றிஆராய்ந்த கமிட்டி சிபார்சு செய்திருக்கின்றது.

---

# மின்னேரிய, கெக்கிராவ தேர்தல் ஆட்சேப மனுக்கள்

## சுப்ரீம்கோர்ட் தள்ளுபடிசெய்தது

கொழும்பு, ஞாயிறு

மின்னேரிய, கெக்கிராவ ஆகிய தேர்தல் தொகுதிகளில் நடைபெற்ற தேர்தல்கள் சம்பந்தமாக தேர்தல் நீதிபதிகள் அளித்த தீர்ப்புகளை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டுக்கு செய்துகொள்ளப்பட்ட மனுக்கள் இன்று செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்த அப்பீல் மனுவை நீதியரசர்கள் எம். சி. எம். சன்சோனி, எச். என். ஜி. பெர்னாண்டோ, பி. ஸ்ரீஸ்கந்தராஜா ஆகிய மூவரும் விசாரித்தனர்.

திரு. சி. பி. டி. சில்வா, எஸ். பி. லெனுவ ஆகியவர்களின் தேர்தல் சம்பந்தமானவையாகும் இந்த இரு மனுக்களும்.

---

# ஆஸ்பத்திரி ஊழியர் - பொலிஸ் அதிகாரி வாக்குவாதம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சுகவீனமுற்றிருக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக உத்தியோகபூர்வமாகச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸ் உதவி அதிபர் ஒருவர் அங்கு கடமை புரிந்துகொண்டிருந்தஆண் தாதி ஒருவரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அதன் காரணமாக பெரும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

ஆஸ்பத்திரிக்குள் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படாத சமயத்தில் மேற்படி உதவி பொலிஸ் அதிபர் சென்றதன் காரணமாகவே இந்தத் தகராறு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

பொலிஸ் அதிகாரியை ஆண் தாதி தடுத்தபொழுது அங்கு வந்த வைத்திய நிபுணர் ஒருவரும் வாக்குவாதத்தில் கலந்துகொண்டார்.

இந்தத் தகராறைத் தொடர்ந்து இரண்டு சாராரும் வைத்திய சுப்ரிண்டனுக்கும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் புகார் செய்துள்ளனர். (ந. நி)

---

# சுப்ரீம்கோர்ட் அனுதாபம்

கொழும்பு, ஞாயிறு

முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் டக்ளஸ் ஜான்ஸின் மறைவு குறித்து இன்று சுப்ரீம்கோர்ட் அனுதாபம் தெரிவித்தது. பிரபல வழக்கறிஞர்களும் சுப்ரீம்கோர்ட் நீதியரசர்களும் வந்திருந்தனர். பிரதம நீதியரசர் இருக்கவில்லை. அட்டோர்ணி ஜெனரல் திரு. அமீர், திரு. ஜான்ஸின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார். நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ நீதிமன்றத்தின் சார்பில் பதில் அளித்துப் பேசினார்.

---

# மாணவர் களைபிடுங்கினர்

யாழ்ப்பாணம், செவ்

முரசுமோட்டை முருகானந்தவித்தியாசாலை மாணவ மாணவிகள் ஊரியான் வீதியில்இருக்கும் திரு செ சிவசுந்தரத்திற்கு சொந்தமான மூன்றேக்கர் வயலில் தலைமையாசிரியர் திரு சி கந்தையாவின் தலைமையில் களை பிடுங்குவதில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு உதவியாக கமத்தொழில் வெளிவிவகார உதவியாளர் திரு ஆர் பாலகணபதி, கொலனி அதிபர் திரு எஸ் செல்வராசா, கிராமமுன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு செ சிவசுந்தரம், இளைஞர் விவசாயக்கழக பிரதிநிதிகள் ஆகியோர் முன்னின்று நடாத்திவருகிறார்கள்.

---

# சம்பள நிர்ணயசபை முடிவுசெய்யட்டும்

## பஞ்சப்படி கோரிக்கைபற்றி முதலாளிமார் அறிக்கை

கொழும்பு, ஞாயிறு

தற்பொழுது தோட்டத் தொழிலாளருக்கு 17-50 பஞ்சப்படி வழங்கவேண்டும் என்று கோரி ஜனநாயக காங்கிரஸ் நடத்தி வரும் வேலைநிறுத்தம் குறித்து எதுவித பேச்சுவார்த்தைகளும் நடத்துவதற்கு தயாராய் இல்லையென்று தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

முதலாளிமார் சம்மேளனம் நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் சம்பள நிர்ணயசபை மூலமாகவன்றி வேறு எந்த வகை பேச்சுவார்த்தைகளினாலும் எதுவித பிரயோசனமும் நடைபெறப்போவதில்லை என்று கூறியுள்ளது.

வேலைநிறுத்தம் செய்து வரும் தொழிற்சங்கத்துக்கும் சம்பளநிர்ணய சபையில் அங்கத்துவம் உண்டு தொழில் மந்திரியும் அச்சங்கத்தை சபையில் இக் கோரிக்கையை விடுக்கும்படி கேட்டுள்ளார். இந்த நிலைமையில் பஞ்சப்படி பற்றி முடிவு செய்யக்கூடிய ஒரே இடம் சம்பள நிர்ணய சபைதான் என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

4 லட்சம் பேர் வேலைநிறுத்தம் செய்வதாகக்கூறப்படுவதைசம்மேளனம் மறுத்துள்ளது.

பசறையில் திரு. ஏ. கே. கந்தசாமி வேலைநிறுத்தம் செய்கிறவர்களுக்கு ரேஷன் கொடுக்கப்படுவதில்லை என்று கூறியுள்ளதையும் சம்மேளனம் மறுத்துள்ளது,

---

# ஆனைப்பந்தி சந்தியில் பஸ்-கார் விபத்து

## மூவருக்கு பலத்த காயம்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று இரவு சுமார் 7 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை சென்றுகொண்டிருந்த இ. போ. ச. கடுகதி பஸ் ஒன்றும் நாவலர் வீதிவழியாக சென்றுகொண்டிருந்த வோக்ஸ்வகன் கார் ஒன்றும் ஆனைப்பந்தியடி சந்தியில் கடுமையாக மோதிக்கொண்டதால் காரில் சென்ற மூவர் பலத்த காயமுற்றனர். கார் அடிபட்ட வேகத்தில், சுமார் 10 யார் தூரத்துக்கு தூக்கி எறியப்பட்டிருந்தது. காரின் வலது புறப்பக்கம் பலத்த சேதத்துக்குள்ளாகியிருந்தது. பஸ்ஸின் முன்புறத்தில் சிறிய சேதமேற்பட்டிருந்தது.

காரில் 4 பேர் பிரயாணம் செய்ததாகவும் இவர்களுள் மூவருக்கு பலத்த காயமேற்பட்டதாகவும் அறியப்படுகிறது, காரைச் செலுத்தி வந்தவருக்கு அதிக காயங்களில்லையென்றும் பின் ஆசனத்திலிருந்தவர்களே பலத்த காயமுற்றதாகவும் தெரிகிறது. இவர்களுள் வாமதேவா என்பவருக்கு தலையிலும், சுந்தரத்தினம், நந்திகேதா என்ற இருவருக்கு உடலிலும் காயம் ஏற்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தவிபத்து நடைபெற்ற சமயத்தில் சைக்கிளில்வந்த ஒருவர் காரின்கீழ் அகப்பட்டார் என்றும் அதனால் அவர் எதுவித காயமுமின்றி தப்பிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைசெய்து வருகின்றனர்.

---

கொழும்பு, திங்கள்

கல்லூரி அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் ஆபாசக் கடிதம் எழுதிய வழக்கில், ஒரு ஆசிரியை உட்பட நான்கு பேர், கம்பஹா மாஜிஸ்திரேட் திரு எம் ஜமீல் முன்னிலையில் ஆஜர் செய்யயப்பட்டனர்,

கிரில்லவல மகாவித்தியாலய அதிபர் திரு டி எஸ் கே பண்டாராவிற்கும், அதே கல்லூரியைச் சேர்ந்த 18 பேருக்கும் நால்வர் ஆபாசக்கடிதம் எழுதியதாக இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணையின்பின் இம் மாதம் 29-ந் தேதிவரை மாஜிஸ்திரேட் வழக்கை ஒத்திவைத்தார்.

---

# தபால், தந்தி சேவையாளர் புகார்

வவனியா, திங்கள்

வவனியாப் பகுதி தபால், தந்தி தொடர்பு சேவையாளர் சங்கம் தபால் அமைச்சருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் தபால் அதிபர் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் பதவி மாற்றத் திட்டம் பழைய முறையிலானது என்றும், தமது சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களில் பலர் சிங்களத்தில் ஜே. எஸ். சி. சித்தியடைந்திருந்தும் இன்னும் சம்பள உயர்வு கொடுக்கப்படவில்லை என்றும் புகார் செய்துள்ளது.

---

# நீதிமந்திரியின் வவனியா விஜயம்

வவனியா, திங்கள்

நீதிமந்திரி திரு. வன்னிநாயக்கா இம்மாதம் 23-ந் திகதி வவனியாவுக்கு விஜயம் செய்வார்.

வவனியா நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் சேமிப்புவாரம் சம்பந்தமான கூட்டம் ஒன்றில் அவர் உரை நிகழ்த்துவார்

---


## வரி விளம்பரம்

### தேவை

மைன்டேர்ஸ்

பிளேட்டின் மெஷினில் (Platin machine) வேலைசெய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். சேமலாபநிதி உண்டு. விண்ணப்பிக்கவும்: 30, பெரியதெரு, யாழ்ப்பாணம் 581


---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி. 63-ம் இல்லத்திலுள்ள [illegible] ஆண்டு ஜூன் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org